Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

THAMPI links with LIONAIR

உங்களின் சௌகரியமான பயணத்திற்குப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட

BRITISH AEROSPACE HS 748 Aircraft............

ROLLS ROYCE ENGINES............

SAFETY & COMFORT.........

WARM HOSPITALITY..........

Tickets Available For RS. 1999/-

விசாரணைகளுக்கு அழையுங்கள்....

01-343125

021-2222504

Hotline - 0777-382343, 072-401423.

(சி-052)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 28 ஆம் நாள் (14.10.2002) திங்கட்கிழமை இதழ் : 14






திருமலையில் கடந்த வெள்ளியன்று படுகொலையான தமிழ்ப் பொதுமக்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: கௌதமன்)

# கிழக்கு படுகொலைகள் விவகாரம்;

# சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம்!



## அஞ்சலிக் கூட்டத்தில் திருமலை எம்.பி. சம்பந்தன்

(திருகோணமலை)

**திருமலையிலும் காஞ்சிரங்குடாவிலும் நடைபெற்ற தமிழ் மக்களின் படுகொலைகள் பற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்போவதாக திருமலை மாவட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

திருமலையில் கடந்த வெள்ளியன்று படுகொலை செய்யப்பட்ட மூன்று அப்பாவிப் பொதுமக்களில் இருவரின் சடலங்கள் நேற்று திருமலையிலுள்ள இந்துக் கலாசார மண்டபத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டபோது அங்கு இரங்கலுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் பேசும்போது - திருமலையில் அப்பாவித் தமிழ் மக்கள் மூவர் படுகொலை செய்யப்பட்டும், அறுபதுக்கும் அதிகமானோர் படுகாயப்படுத்தப்பட்டும் உள்ளனர். யுத்த நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மிகத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும்போது அரசாங்கத்தின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் படுகொலைகளை விசாரிக்க ஹரி குணதிலக தலைமையில் குழு!

(கொழும்பு நிருபர்)

திருகோணமலை, காஞ்சிரங்குடா ஆகிய இடங்களில் நடந்த படுகொலைகள் குறித்து விசாரணை நடத்தவும், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்குமான ஆணைக்குழுவொன்றை அரசாங்கம் அமைத்துள்ளது.

முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக தலைமையிலான இக்குழுவில் நீதிபதி ஒலிவர் வீரசேன, சாமித்தம்பி விவேகானந்தன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவ் ஆணைக்குழுவில் செயலாளராக சிரேஷ்ட பொலிஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பலியானோருக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி!

(திருகோணமலை)

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட இரண்டு அப்பாவிப் பொதுமக்களினதும் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

நேற்றுக்காலை திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் இருவரினதும் பூதவுடல்கள் பொதுமக்களின அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர். உயிரிழந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் திருகோணமலைப் பிரதேசத்தில் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

வீதிகளில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. மட்டுப்படுத்தப்பட்டளவான வாகனப் போக்குவரத்துக்களே இடம்பெற்றன.

இதேவேளை,

திருகோணமலைப் பகுதியில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

## போர் பாதித்த 1,200 குடும்பங்களுக்கு 84 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள்!

### உடன் அமைக்க யாழ். செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக யாழ். மாவட்டத்தில் உடனடியாக சுமார் ஆயிரத்து இருநூறு வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி வீடுகளை அமைக்கும் திட்டத்தை மிகவிரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். செயலகம நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். செயலகமும் மனித முன்னேற்ற நடு நிலைய நிறுவனமும் இணைந்தே இச்செயற்திட்டத்தை தயாரித்துள்ளன. யாழ். செயலகமும், மேற்படி நிறுவனமும் இணைந்தே இவ்வீடமைப்புக்கான நிதி உதவிகளையும் செய்யவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இவ் வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கலை-இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் சங்கமிக்கும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002'

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' என்னும் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது. கலை, இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும் மிகப் பெரிய எண்ணிக்கையில் பங்கேற்க உள்ள இச் சங்கமம் எதிர்வரும் 19,20,21,22 ஆகிய திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூடலில், 'மானிட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப் போரட்டமும் கலை - இலக்கிய, ஊடகங்களின் வகிபாகமும்' என்னும் அடிப்பொருளில் பல்வேறு அமர்வுகள் தினமும் புதிய நேரப்படி

(10ஆம் பக்கம் பார்க்க)

## வீதியைத் திறக்கப் படையினர் மறுப்பு

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நாகர் கோவில் வீதி திறக்கப்படுவதற்காக இணக்கம ஏற்படுத்தப்பட்டு, அவ்வீதியில் புதைககப்பட்டிருந்த கண்ணிவெடிகள் மற்றும் அமுக்கவெடிகள் அகற்றப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



காலம் மாறேக்குள்ள கோலமும் மாறுது...

## பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு இன்று யாழ். வருகின்றது!

பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது. யாழ்ப்பாணம் வரும் இக்குழுவில் இரண்டு பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவர் எனத்தெரியவருகிறது.

இக்குழுவினர் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களான யாழ்ப்பாண நகரப்பகுதி, சாவகச்சேரி நகரப்பகுதி, மட்டுவில், நுணாவில் பகுதிகளையும், வடமராட்சியில தொண்டமனாறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளையும், குடத்தனை, அம்பன், மணற்காடு ஆகிய பகுதிகளையும் இக்குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

## ராணுவ வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு வழங்கிய புலிகள்!

### மட்டக்களப்பில் நடந்த நட்புறவுச் சம்பவம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் இருந்து நேற்றுக்காலை விடுமுறையில் சென்ற படையினருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இரண்டாவது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. வீதிப் போக்குவரத்துக்கள் தடுக்கப்பட்டிருந்தன. பொலீஸார் மற்றும் இராணுவத்தினரது போக்குவரத்துக்களும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்தோருக்கு யு.என்.எச்.சி.ஆரின் 22 செயற்திட்டங்கள்!

(அரியாலை)

அண்மையில் வன்னியிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு வந்து மீளக் குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி, அகதிகளுக்கான ஐ.நா.ஸ்தாபனம் 22 செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

குடாநாட்டிலுள்ள வெவ்வேறு பிர தேச செயலர் பிரிவுகளில் இச்செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இச்செயற்திட்டங்களில் பாட சாலைக் கட்டடங்கள் புனரமைத்தல், சுழற்சி முறைக்கடன் வழங்கல், மல சலகூடங்கள் அமைத்தல், விவசாய உள்ளீடுகள் வழங்கல், சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவித்தல், தற்கா லிக குடிசைகள் அமைத்தல் மற்றும் சமூகசேவை மையங்களை அமைத் தல் போன்ற பல்வேறு செயற்திட் டங்களாக இவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி உத்தேச செயற்திட்டங் களின்படி பருத்தியடைப்பு, மருதங் கேணி பாடசாலை, தெல்லிப்பளை, மண்டைதீவு, தோப்புக்காடு, சண்டி லிப்பாய், பருத்தித்துறை ஆகிய இடங்களில் தற்காலிக கொட்டகை கள் அமைப்பதற்காக 34 லட்சத்து 32 ஆயிரம் ரூபாவும்.

பருத்தியடைப்பு, நாராந்தனை, தோப்புக்காடு ஆகிய இடங்களில் மலசல கூடங்கள் அமைப்பதற்காக 3 லட்சம் ரூபாவும்,

தம்பாட்டி, மண்டைதீவு, பருத்தி யடைப்பு, தோப்புக்காடு ஆகிய இடங் களில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மீனவர்களுக்கான மீன்பிடி உபகர ணங்கள் வழங்கலுக்காக 14 லட் சத்து 95 ஆயிரம் ரூபாவும்,

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க 2 லட்சம் ரூபாவும்,

நாரந்தனை, பருத்தியடைப்பு ஆகிய இடங்களில் சுயதொழில் வாய்ப்புக்கான சுழற்சி முறைக்கடன வழங்கலுக்காக 3 லட்சத்து 90 ஆயி ரம் ரூபாவும்,

மண்டைதீவுப் பகுதியில் அண் மையில் மீளக்குடியமர்ந்தவர்களுக் கான விவசாய உள்ளீடுகள் வழங் கலுக்காக 3 லட்சத்து 69 ஆயிரம் ரூபாவும்,

'ஜெசாக்' ஊடாக சமூகசேவைகள் மையம் அமைக்க 2 லட்சத்து 93 ஆயிரம் ரூபாவும்,

தோப்புக்காட்டில் கிடுகு பின்னும் நிலையம் ஒன்று அமைக்க 2 லட் சத்து 66 ஆயிரம் ரூபாவும்,

காரைநகர், வசாவிளான் பகுதி களில் கிணறுகள் அமைக்கவும், புனரமைக்கவும் 1 லட்சத்து 76 ஆயி ரம் ரூபாவும்,

கைதடி நவீல்ட் பாடசாலை மாண வர்களுக்கான சுயதொழில் பயிற்சி வழங்கலுக்கான இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கலுக்காக 5 ஆயிரம் ரூபாவும்,

உடுவிலில் உள்ள (ஆர்க்) சிறு வர் பராமரிப்பு நிலைய கட்டிட நிர் மாண உதவிகளுக்கு 19 லட்சத்து 73 ஆயிரம் ரூபாவும்,

முஸ்லிம் மக்கள் தங்குவதற்காக ஒஸ்மானியக் கல்லூரி புனரமைப்புக் காக 1 லட்சத்து 57 ஆயிரம் ரூபாவும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி செயற்திட்டங்களில் ஏற் கனவே பல வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இச் செயற்திட்டங் களை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கை களையும் அந்தந்தப் பிரதேச செய லகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

# அரசியல் நிலைவரம் பற்றி மாவை. சேனாதிராசா பேச்சு

(நமது நிருபர்)

யாழ்.தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக் காரியாலயத்தில் நேற்று மாலை 3 மணியளவில் அண்மைக்கால அரசியல் நிலைவரம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அண்மைக்கால அரசியல் நிலைவரம் தொடர்பாக உரையாற்றி னார்.

இக்கலந்துரையாடலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் 'நமது ஈழநாடு' நிர்வாகப் பணிப்பாளருமான சிவமகாராசா, யாழ்ப்பாண மாநகரசபைத் துணை மேயர் அரவிந்தன் உட்பட நூற்றுக்கணக்கான கூட்டணி ஆதர வாளர்களும் கலந்துகொண்டனர். (லி)

## யாழ்.நகரில் சங்கிலி அபகரிப்பு

நேற்று மாலை யாழ்ப்பாண நகர மத்தியில் துணிகர சங்கிலி அபக ரிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற் றது.

பிரதம தபாலக வீதியால் இரவு 7.15 மணியளவில் வைத்தியசா லைக்குச் சென்று விட்டு வந்து கொண்டிருந்த றக்கா றோட், யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த செல்வராஜா மகேஸ்வரி என்பவருடைய ஒன்ற ரைப்பவுண் சங்கிலியே திருடப்பட் டுள்ளது.

இவ்வீதியால் சைக்கிளில் சிவப்பு ரீசேட்டுடன் வந்த இளைஞனே இச் சங்கிலியை அறுத்துச்சென்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கேதாரகெளரி விரதம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் கேதாரகெளரி விரத பூஜை நாளை முதல் நவம்பர் 4ஆம் திகதிவரை தினமும் பகல் 12 மணிக்கு நடைபெறும். இறுதி நாளன்று கெளரிக்காப்பு வழங்கப்படும் என்று நிர்வாக சபையினர் தெரிவித்துள்ள னர். (72)

### வலி. வடக்குப் பிரதேச சபை எல்லைக்குள்

# 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

(வலிவடக்கு)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதி - 2002 இலிருந்து 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செல வில் வலி.வடக்கு பிரதேசசபை எல் லைக்குள் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறுவர் பாடசாலைக்கு தளபா டங்கள் வழங்கல், குளமங்கால் தேவாலய சிறுவர் பாடசாலை அமைத்தல், தம்மனை சுடலை திருத் தல், சன்மார்க்க முன்பள்ளிக்கு மல கூடம் அமைத்தல் ஆகிய வேலை கள் மேற்படி நிதியிலிருந்து மேற் கொள்ளப்படவுள்ளன.

இத்துடன் பிரமாண அடிப்படை நிதி 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா வில் தெல்லிப்பளை குருநாதசாமி கோவில் வீதி திருத்தப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்ட மாகாண வீதி யில் 50 ஆயிரம் ரூபா செலவில் தொந்தனை வீதி திருத்தியமைக் கப்பட்டுள்ளது. 6 லட்சம் ரூபா செல வில் ஈக்கிரான் வீதி திருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

வலி.வடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் மேற்பார்வையில் பிரதேச செயலக அதிகாரிகள் இவ்வேலைகளை செயற்படுத்தி வருகின்றனர். (105)

உங்கள் பிரச்சினைகளுக்கு

இதோ....!

உடனடித் தீர்வு

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்,
தேவையான ஆலோசனைகள்
விளக்கங்கள், தகவல்கள் என்பவற்றை சம்பந்தப்பட்ட
அதிகாரிகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுத்தர அறிமுகமாகின்றது.

'குறைதீர் மன்றம்'

உங்களது பிரச்சினைகளைக் குறிப்பிட்டு - உங்கள் பெயர், முகவரி, தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் உடனே எமக்கு அனுப்பிவையுங்கள். ஓரிரு தினங்களுள் உங்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட அதிகாரியின் பதிலுடன் குறைதீர்மன்றத்தில் பிரசுரமாகும்.

உங்கள் மனுக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
'குறைதீர் மன்றம்'
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# விளையாட்டு

## பாக். கிரிக்கெட் சபை தலைவர் பதவி விலகினார்

### பாகிஸ்தான் அணி படுதோல்வியின் எதிரொலி

(இஸ்லாமாபாத்)

சார்ஜாவில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் - அவுஸ்ரேலியா அணி களுக்கிடையிலான டெஸ்ட் கிரிக் கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி படுதோல்வி கண்டதையடுத்து அந் நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஜெனரல் தாஹிர் ஷியாவும் பணிப் பாளர் ஹிஸ்டி முஜாகிரும் பதவி விலகியுள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியிடம் ஒரு இன்னிங்ஸ் 198 ஓட்டங்களால் பாகிஸ் தான் அணி தோல்வி கண்டிருந்தது. இத்தோல்வி 50 வருட கிரிக்கெட் வர லாற்றில் எந்தவொரு அணியும் எதிர் கொள்ளாததென்று பாகிஸ்தானியப் பத் திரிகைகளால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானிய அணி கோழைத்தனமாகத் துடுப்பெடுத்தா டியதாகவும் குற்றச்சாட்டுகள் தெரி விக்கபபட்டுள்ளன. இரண்டு இன் னிங்ஸ்களிலும் பாகிஸ்தானிய அணி யால் 112 ஓட்டங்களையே பெற முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

## அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கைக்கு வெண்கலம்

(புசான்)

தென்கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய மெய்வல்லுனர் போட்டி களில் நேற்று இலங்கைக்கு வெண் கலப் பதக்கம் ஒன்று கிடைத்தது. ஆண்களுக்கான 4x400 மீற்றர் அஞ் சல் ஓட்டப்போட்டியில் இலங்கைக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

இலங்கைக்குழு தெரிவுப் போட் டியில் முதலாவது இடத்தைப் பெற்றி ருந்ததுடன், தங்கப் பதக்கத்தை வெல்லும் என பெரிதும் எதிர்பார்க் கப்பட்டிருந்தது.

எனினும் சவூதி அரேபிய அணி தங்கப்பதக்கத்தைப் பெற்றதுடன் இந்தியா வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றதால் இலங்கை அணிக்கு மூன்றாவது இடமே கிடைத்தது.

## ஆசிய மெய்வல்லுனர் போட்டியில் சீனா தொடர்ந்தும் முதலிடம்

(புசான்)

தென்கொரியாவின் புசான் நகரில் நடைபெற்றுவரும் 14ஆவது ஆசிய மெய் வல்லுனர் போட்டிகளில் சீனா தொடர்ந்தும் முன்னணியில் இருந்து வருகின்றது. பதக்கப் பட்டியலில் முன்னணியில் உள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| 1.சீனா | 139 | 77 | 65 |
| 2.தென்கொரியா | 81 | 73 | 80 |
| 3.ஜப்பான் | 43 | 68 | 68 |
| 4.கசகஸ்தான் | 18 | 21 | 37 |
| 5.தாய்லாந்து | 10 | 14 | 09 |

இதேவேளை இந்தியா 10 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங் களுடன் 7ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை 2 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 20வது இடத்தைப்பெற்றுள்ளது.

## நினைவுகளில் ஆண்டுகள் முப்பது

உதயம்
15
03
1910



அஸ்தமனம்
14
10
1972

### அமரர் சபாரத்தினம் சூரசங்காரம் LLB (LOND)

*நேருக்கு நேர் நின்று நியாயம் கேட்ட*
*நீதிமகன் நீரைய்யா! சட்டக் கல்வி*
*வீணாகக் கற்றெழுத்தி வென்ற 'சூரா'!*
*வெளிவேடம் பூணாமல் எளிமை வாழ்வைச்*
*சீராக வாழ்ந்துயர்ந்த தேவா; பக்தித்*
*திசை சென்று நிறைவுகண்ட ஞானவீரா!*
*'சூர சங்காரன்' என்ற பெயருக் கேற்ப*
*தூயவரைக் காக்க வந்த சொல்லின் செல்வா!*

*பதவி, புகழ் படிதேடி வந்த போதும்*
*பாய்மடியை விட்டகலா திங்கே நின்றீர்*
*சுதந்திரமாய்த் தொண்டாற்றச் சுயநலங்கள்*
*துளியுமின்றி அமைதியாகச் சேவை செய்தீர்*
*புதுமை பொலி நல்லூரில் வாழ்ந்தீர்! அன்பைப்*
*பொழிந்தணைத்தீர்! முப்பதாண்டின் முன்னே... தெய்வ*
*பதஞ் சேர்ந்தும்.... இன்னும் நம் மனதிற் பூக்கும்*
*பண்பாளர் நீர், எமக்கும் நினைவே தான் வேர்!*

"அரசியலும் சினிமாவும் இல்லாவிடில் மக்களின் வாழ்வு வெட்ட வெளியா கவே தோன்றுமிக்காலத்தில் ஆடம்பரமின்றி இலைமறை காய்போல் அமைதி யாக வாழ்ந்த அறிஞர் சூரசங்காரம் கீதையில் கூறப்படும் சமத்துவ ஞானத்துக்குத் தக்க ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். திறமைசாலி கள், உயர்பதவிகள் தேடி தலைநகரை நாட அறிஞர் சூரசங்காரம் கொழும்பை விட்டு யாழ்.நகர் வந்து உயர் பணியாற்றினார். தம்மைத் தேடி வந்த பெரும் பதவிகளை ஏற்க மறுத்து சுதந்திரமான வாழ்வில்தான் உண் மையான தொண்டு புரியலாமென்ற நம்பிக்கையுடன் சமய, சமூகத் துறை களில் பலனை எதிர்பாராது பல துறைப்பட்ட சேவையில் ஈடுபட்டார்....

தகவல்:
ம.அன்பழகன்
(மருமகன் - வைத்திய நிபுணர்)

*46, வைமன் வீதி,*
*நல்லூர்.*

(சி-051)

# கிளி.யில் ஏ-9 வீதிவழியாக கண்டன மௌனப் பேரணி!

(கிளிநொச்சி நிருபர்)

அம்பாறை, திருகோணமலைப் பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காலை கண்டன மௌனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக ஆரம்பித்த இக் கண்டன மௌனப் பேரணி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் வரை இடம்பெற்றது.

காலை10 மணியளவில் கந்தசுவாமி கோவிலடிப் பகுதியில் வீதிப் போக்குவரத்துகள் தடுக்கப்பட்டன. வீதிகளுக்குக் குறுக்கே மரங்கள் போடப்பட்டு ஏ-9 வீதிப் போக்குவரத்து தடுக்கப்பட்டது.

இதையடுத்து காலை11.30 மணியளவில் கந்தசுவாமி கோவிலடிப் பகுதியில் ஆரம்பமாகிய கண்டன மௌனப் பேரணியில் நூற்றுக் கணக்கானோர் பங்குபற்றினர்.

கண்டன மௌன ஊர்வலம் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தை அடைந்ததும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி போர்டி ஹார்டி கெயினனிடம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயிற்கான மகஜரும் நோர்வே அரசாங்கத்துக்குமான மகஜரும் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து கண்டன மௌன ஊர்வலம் கிளிநொச்சி அரச அதிபரின் செயலகத்துக்குச் சென்று அரச அதிபரிடம் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னுக்கும் மகஜரின் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த மகஜர்கள் கிளிநொச்சி மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் சார்பில் அனுப்பப்பட்டன. இவ் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலேயே கண்டன மௌனப் பேரணியும் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை- திருமலை, அம்பாறைப் படுகொலைகளைக் கண்டித்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஹர்த்தால் மற்றும் துக்கதினம் கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

மருத்துவமனைகளைத் தவிர ஏனைய அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. ஏ-9 வீதியூடான போக்குவரத்துகள் மட்டும் இடம்பெற்றன. கண்டனப் பேரணி காரணமாக காலை 10 முதல் 12.30 வரை வாகனப் போக்குவரத்துகள் ஏ-9 வீதியிலும் தடைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மிலேனியம் புலமைப்பரிசில் வழங்க ஜனாதிபதி திருமலை வருகை!

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து வருடாவருடம் வழங்கப்படும் மிலேனியம் புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நாளையதினம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதி வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா கலந்து கொள்கிறார்.

வடக்கு-கிழக்கு சகல வலயங்களில் இருந்தும் பரிசுபெறும் மாணவர்களையும், வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் வரவேற்கவும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குமான ஏற்பாடுகளையும் மாகாணக்கல்வித் திணைக்களமும், மாகாணக் கல்வி அமைச்சும் மேற்கொண்டுள்ளன.

# நெடுந்தீவுக் கரையில் இளைஞனின் சடலம்!

நெடுந்தீவு மேற்கு மடத்தடிப் பகுதியிலுள்ள கடற்கரையில் 30 வயதுடைய இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் நண்பகல் கரை ஒதுங்கியது. இவரது முகத்தில் காயங்கள் காணப்படுகின்றன. இவர் அரைக்காற்சட்டை அணிந்துள்ளார். சடலத்துடன் அடையாள அட்டையும், கடவுச்சீட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவரது கைப் பையுள் ரேடியோ ஒன்றும் புதிய சேலைகளும் காணப்பட்டன.

திருப்பூர் வீதி, மயிலிட்டியைச் சேர்ந்த இராசேந்திரம் சிவலிங்கம் (721593274V) என அடையாள அட்டையில் பெயர் காணப்பட்டது. (112)

# எமக்குள்ள அதிகாரத்தின் கீழே நாம் நடவடிக்கை எடுத்தோம்!

## காஞ்சிரங்குடா அதிரடிப்படை அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பாதுகாப்புச் சட்டத்தின் 88ஆம், 92ஆம் பிரிவுகளின் கீழேயே விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்தனர் என விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் குணதிலக தெரிவித்துள்ளார்.

காஞ்சிரங்குடா முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் பொது மக்கள் மீது நடத்திய தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இது தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலிசாருக்கு இருக்கின்ற அனைத்து அதிகாரங்களும் விசேட அதிரடிப்படையினருக்கும் உள்ளன. காஞ்சிரங்குடாவில் இந்த அதிகாரத்தையே இவர்கள் பயன்படுத்தினர்.

ரூபஸ் குளத்தில் புலிகளின் பாரிய முகாம் ஒன்று உள்ளது. இம் முகாமுக்கான விநியோகங்கள் காஞ்சிரங்குடா ஊடாகவே இடம்பெற வேண்டும். இதற்கு இடையூறாக இருந்து வரும் விசேட அதிரடிப்படை முகாமை பொதுமக்களைக் கொண்டு அழித்து விடுவதே புலிகளின் திட்டமாக இருந்தது.

பாதுகாப்புச் சட்டத்தின் 88, 92 ஆம் பிரிவுகளைப் பயன்படுத்தி புலிகளின் இத்திட்டத்தை விசேட அதிரடிப்படையினர் முறியடித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படுகொலைகளைக் கண்டித்து நாடகக் கலைஞர்கள் மௌனத் தியானம்

கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்தும் மரணமடைந்தவர்களின் ஆத்மசாந்திக்காகவும் கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தில் மௌனத்தியானம் நடைபெற்றுள்ளது.

இத்தியான நிகழ்வின்போது சுமார் இருபது நாடகக் கலைஞர்கள் கறுப்புநிறச் சீருடை அணிந்து மௌனத் தியானம் செய்தனர். இத் தியான நிகழ்வில் தென் பகுதியில் இருந்து வருகை தந்த சுனித்திரா பவுண்டேசன் நிறுவனத்தின் கலை இயக்குனர் ரோகண தேவ என்பவரும் கலந்துகொண்டு தியான வழிபாட்டில் ஈடுபட்டார்.

# முல்லை. மாவட்ட அமைப்புகள் படுகொலைகளுக்குக் கண்டனம்

(முல்லைத்தீவு)

கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியமும், முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியமும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இவ்விரு அமைப்புக்களினாலும் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் பிரதிகள் கிளிநொச்சியில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் பிரதிநிதியான போர்டி ஹார்டி கெயினனிடம் கையளிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# அதிரடிப்படை முகாமை நாம் அகற்ற முடியாது!

## பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜா

(கொழும்பு நிருபர்)



அம்பாறை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமை உடனடியாக அகற்றி சமாதான சூழ்நிலைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை அகற்ற வேண்டும் என பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் எந்தவொரு அதிரடிப்படை முகாமையும் அகற்ற முடியாதென பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். காஞ்சிரங்குடாச் சம்பவத்தில் அதிரடிப்படையினர் மீது எந்தக் குற்றமும் இல்லை. அவர்கள் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலிருந்து....







படங்கள்:
விஷ்ணு,
லிவிங்ஸ்டன்







# திரையுலகத்தினர் திரண்ட காவிரி நீர்ப் போராட்டம்!



பேரணியில் நடிகர்கள்

(சென்னை)

கர்நாடக அரசு காவிரி நீரை திறந்து விட மறுப்பதைக் கண்டித்து தமிழகத் திரை நடிகர்கள் - நேற்று முன்தினம் தமிழக நகர் நெய்வேலியில் மாபெரும் பேரணி நடத்தினர்.

பேரணியில் கலந்துகொண்ட நடிகர்கள் வெற்றுப் பானைகளை தலையில் சுமந்து கர்நாடக அரசுக்கு கண்டனம் தெரிவித்தபடி வந்தனர்.

முன்னர் பாரதிராஜா, விஜயகாந்த, சரத்குமார், ராதாரவி உட்பட 10 பேர் நெய்வேலி அனல்மின்நிலையத் தலைவர் ஜெயராமனை சந்தித்து மனு கொடுத்தனர். இதன்பின்னர் திரையுலகினர் பங்கேற்ற பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரையுலகினரின் இந்த பிரமாண்ட பேரணியால் நெய்வேலி நகரமே குலுங்கியது. ரசிகர்கள் - பொதுமக்கள் என பல லட்சம் பேர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

திரையுலகினர் பிரமாண்ட பேரணியையொட்டி சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

திரையுலகினரின் பேரணியில் விஜயகாந்த், கமல்ஹாசன், சரத்குமார், நெப்போலியன், கே.என். காளை, எஸ்.எஸ்.சந்திரன், சத்யராஜ், டி.ராஜேந்தர், சிவக்குமார், விஜய், சந்திரசேகர், அஜித், கார்த்திக், பிரபு, தியாகராஜன், பிரசாந்த், விக்ரம், முரளி, சூர்யா, நாசர், பிரபுதேவா, விவேக், வடிவேலு, செந்தில், தாமு, பாண்டியன், ரவிச்சந்திரன், ராமராஜன், கரண், டெல்லி கணேஷ், ராஜேஷ், அருண்குமார் உட்பட நடிகர் பலர் திரண்டனர்.

நடிகைகள் - மனோரமா, ராதிகா, ரோஜா, சிம்ரன், கிரண், மும்தாஜ், காயத்ரி ரகுராம், ரவளி, அனுராதா, அபிநயஸ்ரீ, காந்திமதி, ஜோதிகா, ஷாலினி, உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பேரணியின் பாதையில்-

கேட்டதும் கொடுப்பவனே... கிருஷ்ணா.... கிருஷ்ணா கெஞ்சி கேட்டாலும் கொடுக்கலையே எம். எம்.கிருஷ்ணா.....

காவிரித்தாயே.... காவிரித் தாயே... கன்னடர் கைகளில் சிறைப் பட்டாயே.....

தமிழர் படை உனை மீட்க திரண்டெழுகிறது தலை உடைக்கும் உரிமைப்போர் மூண்டெழுகிறது நதிகளை இணைத்திடு நாளைக்கு..... காவிரி நீரால் நனைத்திடு இன்றைக்கு....

போன்ற வாசகங்கள் காணப் பட்டன.

தமிழ்த் திரையுலகினர் பேரணியில் மதுரை ஆதீனம், அருணகிரிநாதர் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் பங்கேற்றார். அவர் நிருபர்களிடம் கூறுகையில்- திரையுலகப் பேரணியில் கலந்துகொள்ள வந்துள்ளேன். தமிழகத்தில் நடைபெறும் காவிரி நீர்ப் பிரச்சினை போராட்டத்தில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகக் கலந்து கொள்வது நமது கடமையாகும். கர்நாடக அரசு பிடிவாதத்தை விட்டுவிட்டு தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடவேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

நெய்வேலியில் நடைபெற்ற திரையுலகினர் பேரணியில் பங்கேற்ற நடிகர் - நடிகைகள் கறுப்பு பனியன் - கறுப்பு சட்டை அணிந்து வந்தார்கள். அந்தப் பனியனில் தமிழ் வாழ்க, வேண்டும் காவிரி என்ற வாசகங்கள் அச்சிடப்பட்டு இருந்தன.

# இந்தோனேஷியாவில் குண்டுவெடிப்பு!

# உல்லாசப்பிரயாணிகள் 200 பேர் பலி!!

## அமெரிக்க எச்சரிக்கைகளால் பலனில்லை

இந்தோனேசியாவில் இடம்பெற்ற சக்திமிக்க கார்க்குண்டு வெடிப்பொன்றில் அவுஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த உல்லாசப்பயணிகள் உட்பட இருநூற்றுக்கும் அதிகமானோர் உடல் சிதறிப் பலியாகி உள்ளனர். 300பேர் வரையில் காயமடைந்தனர்.



தீச்சுவாலையால் விழுங்கப்படும் மதுபானக் களஞ்சியம்

இந்தோனேசியாவில் ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்க தூதரகம் தொடர்ச்சியான பல் எச்சரிக்கைகளை விடுத்து வந்தது. அல்கெய்டா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் அமெரிக்கர்களை இலக்கு வைத்து தாக்குவார்கள் என்று அந்த எச்சரிக்கைகள் தெரிவித்தன.

மேற்படி பயங்கரக் குண்டுவெடிப்பு பற்றிய தகவல்கள் மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் பிந்திய தகவல்களாக இணையத்தளங்கள், பி.பி.சி, சி.என்.என். போன்ற சர்வதேச தொலைக்காட்சி சேவைகள், சர்வதேச ஒலிபரப்பு சேவைகள் ஆகியவற்றில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நேற்று மாலைவரை வெளியான தகவல்களின் அடிப்படையில் வாசகர்களுக்கு இச்சம்பவம் தொடர்பான செய்திகளை வழங்குகிறோம்.

"சனிக்கிழமை இரவு இந்தோனேசியாவின் விடுமுறைக்கால உல்லாசத் தீவான பாலித்தீவில் (**Island of Bali**) இரவுக் களியாட்ட நடனத்தில் போதை மிகுதியில் நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நேரம் 1530 GMT அண்மித்தது.

திடீரென இரவுக் களியாட்ட வளாகத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்து பெரும் வெடியோசை கேட்க, களியாட்ட விடுதியின் கட்டடச் சுவர்கள் தகர்ந்து அங்கு நிறைந்திருந்தவர்கள் மீது வீழ்ந்து கொள்ள பல பேர் அங்கே மசிந்து, மடிந்துபோயினர். சில வினாடிகளுள் அந்த மகிழ்ச்சிக் கூடம் இரத்தம், தசை, என்புகள் நிறைந்து மரண ஓலம் எழும் கூடமாக மாறியது. காயப்பட்டவர்கள் ஓலமிட்டனர். பலரது ஓலம் அடங்கி ஓய்ந்தது.



காயப்பட்டு அதிர்ச்சியடைந்த உல்லாசப்பிரயாணிகள்

எங்கிருந்தேபா பரவிய பெரும் தீ அங்குள்ள மதுபானக் களஞ்சியங்கள் எரிபொருட்களஞ்சியங்களில் மேலும் தொட்டுக்கொள்ள பெரும் தீ பரவி, குண்டுவெடிப்புகளில் காயப்பட்டவர்கள் மீட்கப்படமுடியாத நிலையில் மரணித்துக் கொண்டனர்.

தொலைபேசிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தூதரங்களிலும் அலறின. சில மணித்தியாலங்களில் உல்லாசத் தீவில் அமெரிக்க வான்கலங்கள் சில வந்திறங்கின. அதிலிருந்து அமெரிக்க மருத்துவர்கள் தாதியர் உள்ளிட்ட அணி தரையிறங்கியது. முதலுதவி மருந்துகள் ஆபத்தங்களுடன் அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தனர். அவுஸ்திரேலிய உலங்குவானூர்திகள் தரையிறங்கி காயப்பட்ட அவுஸ்திரேலியர்களை ஏற்றிச்சென்றன...."




- இவ்வாறு இச்சம்பவத்தை அவுஸ்ரேலியச் செய்தியாளர் ஒருவர் விபரித்துக்கொண்டிருந்ததை ஒளிபரப்பிய மேற்குலக ஒலிபரப்புச் சேவை, அங்கு இறந்த சடலங்களை இனங்காண முடியவில்லை என்றும், இந்தோனேசிய வரலாற்றில் இப்படியொரு அதிதுன்ப நிகழ்வு நடந்தது இல்லை என்றும் தெரிவித்தது.

இந்தோனேசியாவின் பொலிஸ் தலைவர் ஜெனரல் பச்சரியர் மிகுந்த கவலையுடன் கருத்துத் தெரிவிக்கையில் இந்தோனேசிய வரலாற்றின் மிக மோசமான துயரமென விபரித்தார். இவர் உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. இந்தோனேசியாவில் பாதுகாப்பு அமைச்சகத்தை சேர்ந்த அதிகாரியொருவர் செய்தியாளர்களின் கேள்விகளில் குழப்பமடைந்தவராகக் காணப்பட்டார். 'இஸ்ரேலில் ஒவ்வொரு நாளும் தானே குண்டுகள் வெடிக்கின்றன. இங்கு ஒரு நாள்தானே இப்படியொரு சம்பவம் நடந்துள்ளது. என்ன தலைகீழாக நின்று முயற்சித்தாலும் இவ்வாறான விடயங்களைத் தடுக்க முடியாது', எனக் கோபத்துடன் பதில் தந்தார் அவர்.

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட், கொல்லப்பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள் அவுஸ்திரேலியர்கள் என்பதால் இது தமது நாட்டுக்கு 'ஒரு பெரிய தேசியத் துயரம்' என விபரித்தார் .இது ஒரு கோழைத்தனமான காட்டுமிராண்டித்தனம் என்று விபரித்த ஹவாட் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எவ்விதமான நிபந்தனையுமில்லாத அர்ப்பணிப்புடன தொடரப்பட வேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்தார்.

நேற்றிரவு இந்தோனேஷியாவின் தேசியப் பாதுகாப்புப் பற்றி ஆராய்வதற்காக இந்தோனேஷிய அரசியற் தலைவர்கள் படைகளின் தளபதிகள், ஆலோசகர்கள் பங்குபற்றும் மாநாடு ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.



காயப்பட்டவர்களால் நிரம்பிவழியும் மருத்துவமனை



அடையாளங்காண முடியாதபடி கருகிய உடல்கள்

# தமிழ்மண் சத்தை உறிஞ்சிவிட்டு விஷ வித்தை தருகிறார் ரஜினி!

## இயக்குநர் பாரதிராஜா நெய்வேலியில் ஆவேசம்

தண்ணீர் கேட்டு கண்ணீருடன் வந்து இங்கே நாம் எல்லாம் கூடியிருக்கிறோம். நான் உணர்ச்சி வசப்பட்டுத்தான் பேசுவேன். பயந்து பயந்து பேசுவதில் ஒரு பயனும் இல்லை.




காவிரிப்பிரச்சினையில் இப்போது இனப்பிரச்சினைதான் அதிகமாக உள்ளது. தமிழர்களை இளிச்சவாயர்களாக நினைக்கிறார்கள். உச்சநீதிமன்றத்தீர்ப்பையே மதிக்கமுடியாது என்றால் அவர்கள் அண்டை மாநிலமா? அல்லது அண்டை நாடா என்கிற சந்தேகம் வருகிறது.

அங்கே நம்முடைய கொடும்பாவிகளை எரிக்கிறார்கள். ஊர்வலம் போகிறார்கள். போராட்டம் நடத்துகிறார்கள். பாரதிராஜா, சத்தியராஜ் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தார்கள். அப்படியும் இங்கே அமைதியாகதான் தமிழன் இருந்தான்.

நாங்களும் இங்கே உசுப்பிவிட்டால் பற்றி எரியாதா? சிதறிக் கிடக்கிற தமிழனை ஒற்றுமைப்படுத்த எங்களால் முடியாதா? அறவழியில் போராட்டம் என்கிறார்கள், அமைதிப்போராட்டம் என்கிறார்கள். மாற்றினால் அரிவாள், தீ என்று சொல்லலாம். உடனே பாரதிராஜா வன்முறை பேசுகிறான். அரிவாள், தீயைப் பற்றி பேசுகிறான் என்று வர்ணம் பூசி விடாதீர்கள்.

ஊர்வலம் நடத்தினால் தண்ணீர் வந்துவிடுமா? மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று தடுத்தால் தண்ணீர் வந்துவிடுமா? என்று கேட்கிறார்கள். இது உணர்வைக் காட்டுவதற்கு நாம் நடத்துகிற ஒரு வழிமுறை. மின் சாரம் தரக்கூடாது என்று சொல்வதில் என்ன தவறு? அவர்கள் தண்ணீர் தரக்கூடாது என்கிறபோது நாம் பதிலுக்கு அப்படி சொல்ல உரிமை உண்டு.



ஊர்வலம் நடத்தினால் தண்ணீர் வந்து விடுமா? என்று கேட்கிறாயே உண்ணாவிரதம் இருந்தால் மட்டும் தண்ணீர் வந்து விடுமா? தமிழனை பிரிக்கவே இந்த உண்ணாவிரதம் நடக்கிறது. உண்ணாவிரதத்துக்கு வாழ்த்து கர்நாடகத்தில் இருந்து வருகிறது.

அங்குள்ள முதல்வர் கிருஷ்ணா இங்கே இருக்கிறவருக்கு வாழ்த்து சொல்கிறார் என்றால் அண்டர்கிரவுண்டில் என்னென்னவோ நடக்கிறது என்று தானே அர்த்தம். இன்னும் தமிழன் விழித்துக்கொள்ளவில்லை என்றால் தமிழனை போல மடையன் வேறு யாரும் இருக்க முடியாது.

அங்கே 40 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கதி என்னவாகும் என்று கேட்கிறாயே? அப்படியானால் அங்கே உள்ள தமிழர்களை காட்டிக் கொடுக்கிறாயா? இங்கேயும் கன்னடர்கள் இருக்கிறார்கள். அதை மறந்து விடக்கூடாது. அதைத்தான் விஜயகாந்தும் சொன்னார்.

அங்கே உள்ள தமிழர்கள் கதி என்னவாகும் என்று நீ சொன்னது போல நாங்கள் சொல்லமாட்டோம். அப்படி எதுவும் செய்யவும் மாட்டோம். இங்கே அர்ஜுன், முரளி போன்ற நல்ல நண்பர்கள் வந்திருக்கிறார்கள். நாங்கள் பிரித்துப் பார்ப்பது இல்லை. இது வந்தாரை வாழவைக்கும் தமிழகம்.

விருந்தாளியாக வாருங்கள். நன்றாகச் சாப்பிடுங்கள். உண்டு உறங்குங்கள். திண்ணையில் படுத்து தூங்குங்கள். ஆனால் வீட்டுக்கு தலைவனாக கனவு காணாதீர்கள். இங்கே மண்ணின் மைந்தனை தவிர இனிமேல் யாரையும் ஏற்றுக்கொள்ளாது இந்தமண். ஏற்றுக்கொள்ளவும் விடமாட்டோம். இந்த மண்ணுக்கு தலைவனாகி விடலாம் என்று யாரும் தப்புக்கணக்கு போடவேண்டாம்.

எதிரிகளை மன்னிக்கலாம். துரோகிகளை மன்னிக்கவே கூடாது. இந்தப பூமியில் உள்ள சத்தை உறிஞ்சி மரமாக வளர்ந்து இருக்கிறார்கள். அந்த மரம் நல்ல கனியைத்தர வேண்டும். நல்ல பூவைத் தரவேண்டும். நிழலை தரவேண்டும். ஆனால் விஷவித்தை இந்த தமிழ் மண்ணில் விதைக்காதே.

இங்கே கலைஞர்கள் எல்லாம் ஒன்றுபட்டு கூடி இருக்கிறோம். அரசியல் வேர்கள் குறுக்கிட்டன. நல்லவேளை தப்பிப்பிழைத்து பேரணி நல்லமுறையில் நடந்து இருக்கிறது. அரசியலை கலைத் துறையில் கலக்காதீர்கள். உங்கள் நடிப்பை தான் மக்கள் ரசிக்கிறார்கள். அரசியலுக்காக உங்களை ரசிப்பது இல்லை.

முதல்வர் ஜெயலலிதாவை பார்த்ததை குற்றம் சொல்கிறார்கள். நான் பயப்படமாட்டேன். இவ்வளவு கலைஞர்களை பாதுகாப்பாக கூட்டி வந்து திரும்ப அழைத்து செல்ல வேண்டாமா? அந்த பாதுகாப்புக்காக தான் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தோம். அவரை சந்திக்க போகாமல் செக்யூரிட்டி நிறுவனம் வைத்திருப்பவர்களையா போய் பார்க்கமுடியும்?

எனக்கு குதர்க்கம் பேசத் தெரியாது. எனக்கு அப்பன் மாதிரி இருக்கிறீர்கள். கூப்பிட்டு தவறை திருத்த வேண்டுமே தவிர அதை வைத்து குதர்க்கம் செய்யலாமா?

இப்போது தமிழ் மண்ணில் ஒரு எழுச்சி ஏற்பட்டு இருக்கிறது. ஒற்றுமை தலை தூக்கி இருக்கிறது. தமிழன் இந்த உணர்வை தூங்க விடக்கூடாது என்றும் பாரதிராஜா நெய்வேலியில் பேசினார்.

# நூல் அகம்

நூல்: தமிழர் அறிகையும் பரத நடனமும்

நூலாசிரியர்: பேராசிரியர் சபா. ஜெயராசா.







இருபத்தியெட்டு உசாத்துணை நூல்களின் வாசிப்புக்கள்; பேராசிரியர்.வ.ஆறுமுகம் பேராசிரியர்.ஆ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணன் ஆகிய மேலோர்களின் கலந்துரையாடற் துணைகள்; கொழும்பு தமிழ்ச்சங்கம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நூலாசிரியர் ஏலவே ஆற்றியிருந்த உரைகள்; இந்த நூலின் பின்புலங்கள்.

பரத நடன மாணவிகளின் பரத நடன ஆடல்மொழி வண்ணப் படங்களுடன் இது ஆய்வு நூலாக ஏற்பாடாகியிருக்கின்றது.

இசை நடனத்துறைகளுக்கு ஆற்றிய பெரும்பணிகளை மனமுவந்து வாழ்த்தி என்ற நல் வாசகங்களோடு பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு இந்த நூல் சமர்ப் பணமாகியிருக்கின்றது.

இந்துப்பெரும் பண்பாட்டிலே கோவில்களிலே ஆடும் பெண்களைத் தாழ்வாகக் கருதும் மனப்பாங்கின் வளர்ச்சியானது பரதநாட்டியத்தை ஒரு காலகட்டத்திலே தாழ்வுமிக்க கலையாகக் கருதும் நிலைக்குக் கொண்டு சென்றது. ஆனால் எந்தப் பண்பாடு அதனைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு சென்றதோ அதே பண்பாடுதான் அதனை மீட்டெடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது என்ற, அத்தியாயம் (5) இலே நூலாசிரியர் முடிவுரை போலக் கூறிவைக்கும் இந்த வாசகங்கள்தான் என்னை இந்த விமர்சனத்தை எழுதத் தூண்டுகின்றன.

இது ஒரு ஆய்வு நூல். நூலாசிரியர் இராமநாதன் அக்கடமியின் தலைவர் பேராசிரியர் ஆய்வு நோக்கிலே உண்மைகளை - இறந்தகாலப் போக்குகளை ஒப்புக் கொள்ளவேண்டிய விஞ்ஞான மனோபாங்கைக் கடைப்பிடிக்க வேண்டியவர்.

நூலாசிரியர் ஆய்வு நோக்கு நேர்மையைக் கைக்கொண்டமையும் ,இந்துப்பண்பாட்டிலே பரதநாட்டியத் தையோ, பரதமாடும் பெண்களையோ, இந்துப்பெரும் பார்வையாளர்களையோ, விடுத்து மனப்பாங்கை நொந்து கொள்ளும் அந்த அனுபவ முதிர்ச்சியும் பொறு ப்புணர்வும் என்னை வெகுவாகச் சிந்திக்கவும் இன்னும் அவரை நேசிக்கவும் வைக்கின்றது. அவருடைய கலந்துரையாடற் துணை மேலோர்களின் மீது எமது பணிவை இன்னும் அதிகரிக்க வைக்கின்றது.

இன்றைக்குப் பரதம் ஒரு பட்டப் படிப்பு. பரதப் பெண்பிள்ளைகள் ஆங்கிலமும் சரளமாகி பட்டம் பெற்ற மிடுக்கும் சேர்ந்த நிலைமைக்கு உள்ளாகின்றார்கள். இந்தியப் பெருநிலப்பரப்புப் பரதக் கலைஞர்களோடு போட்டி போடுகின்றார்கள். ஆங்கில நாடுகளிலே நடராஜாப் பெருமானின் பாதத்தடியில் சிட்டிவைத்து ஒளியேற்றுகின்றார்கள். யாழ்ப்பாணத்துக் கேயுரித்தான பண்பாடு, கலை,கலாசாரம், பவித்திரம், மாட்சி, மேன்மை, உயர் நோக்கு சிந்தனைகளோடு தமிழே தெரியாதிருப்பினும் தமிழ்க் குழந்தைகளுக்கு யாழ்ப்பாணக் கலாசாரத்தை ஊட்டி நாட்டும் கடமைகளிலே காத்திரமாக இருக்கின்றார்கள். இது இன்றைக்கு ஒரு யதார்த்தம். பரதம் பட்டப்படிப்பானமை கொண்டாடப்பட வேண்டியது. இதனை மனங்கொண்டு நூலாசிரியரால் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்க ளுக்கு நன்றி கூறப்படுவது என்னை வெகுவாகக் கவருகின்றது. துணைவேந்தர் பொ.பாலசுந் தரம்பிள்ளை அவர்களது தொலைநோக்கும் பரதத்தைப் பட்டப்படிப்பாக்கிச் செய்து வைத்த சேவையும் சமூகச் சிற்பியாக அவரை யாழ்ப்பாண மக்கள் கொண்டாட வழிவகுக்கும் வாசகங்களாகவே 'மீட்டெடுக்கும் முயற்சி' என்ற நூலாசிரியரின் அந்த வாசகங்கள் அமைவதாகக் கருத இடமுண்டு. உண்மையும் அதுதான், பாருங்கள்! இந்த சமர்ப்பண ஆவணம் அவர்களுடைய பொன்விழாக் காலத்திலே வந்தமைவதென்பது தெய்வ நியதி, இசை எங்கேயோ அங்கே நான் இருப்பேன் என்பதாக தெய்வ வாக்குண்டு என்பது சுவாமி விவேகானந்தர் கூற்று. (பக்தியோகம் VOL.4)

சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட (2000 பக்கங்களுக்கு மேல்) 'அறிகை' நூல்களை எழுதியிருக்கும் நூலாசிரியரின் இந்த நூலிலே அணிந்துரை இல்லை. அறிமுக உரை இல்லை.

உளவியலாளர்கள் ஒரு மனதின் சட்டங்களை (frame) Scientific frame, (விஞ்ஞான சட்டம்) எனவும; Poetic frame (ஓசைலயச்சட்டம்) எனவும் பகுப்பார்கள். இவையிரண்டும் ஒன்றையொன்று சாராதவை அல்ல (not mutually exclusive) என்று தான் உளவியலா ளர்கள் கூறுவார்கள். புதிய கல்விச் சீர்திருத்தக் கலைத்திட்டம் இந்த இரு சட்டங் களையும் கருத்துக்கெடுத்து சமநிலைப்பட்ட கலைத்திட்டவாக்கத்தை முன்மொழிதலிலே ஆடல், பாடல் அசைவுகளுக்குப் பாரிய இடமளித்துள்ளது.

தொன்மங்கள் (myths) என்ற முக்கிய முடிச்சொன்றை நூலாசிரியர் இங்கே அறிவித்துத் தனது உளவியல் அறிகை மேலாண்மையைக் கொண்டு ஓசைலயச்சட்ட வழவு விடயங் களை விஞ்ஞானச்சட்ட வழவுகளுக்கு எடுத்துச் செல்லும் கையாளல்களால் அந்த முடிச்சுக் களை அவிட்டும் வைத்திருக் கின்றார். இது அத்தனை இலகுவானது அல்ல. ஏனென்றால் தமிழர், அறிகை, பரதம், நடனம் என்ற ஏலவே ஈர்ப்பு மிக்க இத்தனி அறிகைப்புலங்களைக் கூட்டுச் சேர்க்கை புலமாக்குதல் என்பது மனச்சட்டங்களின் இணைவு பற்றிய பிரச்சனை மேலோங்கியதொன்றோடு தொடர்புபட்டது.

தொன்மங்களை நான் ரசித்தேன். உளவியல் மனிதனையும் அவனது உளவியற் சூழலை யும் உள்ளடக்கும் வாழ்க்கை வெளி (Life space) தொன்மங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பதனால் கள அறிகைக் கொள்கைகளைக் கற்கும் கல்வி முதுமாணி மாணவர்களுக்கு இந்த நூல் ஒரு பொன்மலராகவும் இருக்கும் என நினைத்தேன்- நினைக்கின்றேன்.

தொன்மங்கள் என்றால்-

அது புனிதம், புனைக்கதைகள் அல்ல, எனினும் புனைவுப்பண்புகளும் ஏன் கற்பனை களும் கூட அங்கும் உண்டு, எனவும்,

மக்கள் தமது அறிகை அமைப்பின் அடிப்படையில் சூழலையும் அறியாப்பொருளையும் அறிவிக்க முயலும் செயல்முறை தான் இது எனவும்

வியப்பு, பயம், கொடுரம், அச்சம், நயப்பு முதலிய அனுபவங்கள் வழியாக இவை உருப்பெற்றன எனவும் -

**இரத்தினம் இரவீந்திரநாதன்**
(உதவி விரிவுரையாளர்)

இந்த அனுபவங்களின் உடல் மொழியாக ஆடல்கள் தோன்றுதல் இயல்பான செயற்பாடு எனவும்

கிரேக்க தொன்மங்களிலே கலையும், ஆடலும் பகுத்தறிவுப் பண்புகளை மீறுகின்றன எனவும்,

தொன்ம உணர்வுகளாலும் ஆடல்களாலும் துன்பங்களைப் போக்கலாம் என்பது பூர்வீக மக்களின் நம்பிக்கை எனவும்

சமூக நெருக்குவாரங்கள், சமூக உறுத்தல்கள், பல்வேறு உணர்வு கள் நனவிலி மனத்திலே அழுத்தி யும் அழுக்கியும் வைக்கப்பட இவை பின்னர் பகுத்தறிவற்ற கற்பனைகளாக வெளிவர (கனவாக)- அவற்றின் விளைவான வடிவமைப்புக்கள் தொன்மங்களை (ஐதீகங்கள்) உருவாக்க, காரண காரியத் தொடர்புகள் கொண்ட பகுத்தறிவு ஒதுங்கி அங்கே படைப்பாற்றலும கற்பனையும் மேலோங்கு கின்றன எனவும் குறிப்பிடுகின்ற நூலாசிரியர் தொன்மங்கள் ஆடலாகும் போது விளையும் நன்மைகளையும் பட்டியலிட்டிருக்கின்றார்.

இந்த நூலை நான் வாசித்து முடித்ததும் நனவிலி மனத்தின் இப்பகுதியை தொடர்ந்த ஒலியோ என்று நினைத்தேன். இதை ஆவர்த்தனமாக்க ஈகோ (சின்ன நான்) வுக்கு சம்பவங்கள் சம்பவிக்கின்றனவோ என நினைத்தேன். இட் என்ற (sex a agression?) வேட்கை இச்சைகளைக் கையாளலிலே ஈகோவினது குற்ற உணர்வுகளைக்கேலி செய்து விமர்சிக்கும் சுப்பர் ஈகோ என்ற மற்றைய நனவிலிப் பகுதி (மனச் சாட்சி) மனிதப்பகுத்தறிவை மீறும் படைப்பாற்றல் பகுதியோ என்றும் நினைத்தேன். இந்தப் பின்னணியோடு இந்த விமர்சனத்தை எழுதத்தூண்டிய அத்தியாயம் (5) இலே நூலாசிரியர் முடிவுரை போல எழுதிய பந்தியை வாசகர்களின் சிந்தனைக்கு மீண்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

✻

## அகில மொழியிலிருந்து அன்னை மொழிக்கு

### A poison Tree

I was angry with my friend
I told my wrath, my wrath did end.
I was angry with my foe:
I told it not, my wrath did grow.

And I watered it in fears,
Night and morning with my tears,
And I sunned it with smiles,
And with soft deceitful wiles.

And it grew both day and night,
Till it bore an apple bright;
And my foe beheld it shine,
And he knew that it was mine.

And into my garden stole
When the night had veiled the pole;
In the morning glad I see
My foe outstretched beneath the tree.

*William Blake (1757- 1827)*



### நச்சுமரம்

கோபம் கொண்டேன் தோழன் மீதில்;
கோபம் சொன்னேன் குளிர்ந்து தீர்ந்தது;
கோபம் கொண்டேன் தீய பகைவனில்;
கூறினேன் அல்லேன்; வளர்ந்தது கோபம்.

அச்சத்துடனே அதற்கு நீர் வார்த்தேன்;
அல்லும் பகலும் கண்ணீர் ஊற்றினேன்;
எத்தும் சூதும் இயைந்த முறுவலாம்
எறிக்கும் வெயிலை அதற்குப் பாய்ச்சினேன்.

அல்லும் பகலும் வளர்ந்து வளர்ந்தே
அழகிய அப்பிட் பழத்தை தந்தென்
இல்லில் இருந்ததை எதிரி கண்டான்;
என்பழம் என்பதும் அறிந்து கொண்டான்.

இருட்டுச் சூழ்ந்ததும் தோட்டத் துள்ளே
எவரும் காணா வகையில் நுழைந்தான்;
மரத்தின் கீழே காலையிற் கிடந்த
மாற்றான் உடலை மகிழ்வுடன் கண்டேன்.

அகிலமொழி மூலம் : வில்லியம் பிளேக் (1757 - 1827)

அன்னை மொழியில் : கவிஞர் இ.முருகையன்.

## வெளிநாட்டுப் பறவைகள்

காலநிலை மாறிவிட்டால் கண்டங்கள் தாண்டியெங்கள்
ஊரில் அணிவகுத்து
உலாப்போகும் பறவைகள்.
எங்கள் வயல்களிலே இறங்கி
மணிபொறுக்கி
தங்களுக்குள் ஏதேதோ தர்க்கிக்கும்
தரையமர்ந்து
இறகுலர்த்திக்கொள்ளும்! எங்களது வானெல்லாம்
வரிசை பிசகாமல் வட்டமிடும்!
அவற்றினது
'பாட்டின் அடி'யெனக்குப்புரியாத போதும்... அதெம்
காட்டுக் குயில்களது கானம்போலத் தானிருக்கும்.
அன்றொருநாள் எந்தன் அயலிலுள்ள
குளக்கரையில்
வெண்ணுரைகள் பூத்ததென
வந்தமர்ந்த அவற்றோடு
உரையாடி மகிழ்ந்தேன் ஊர்ப்புதினம் சொல்லிவிட்டென்
தரைநிலையைக் கேட்டுவிட்டுச்
"சந்தோசம்" என்றன......தாம்
"வெடிச்சத்தம் கேட்காத வெளிப்பிலின்று வந்ததற்குக்
கொடுத்துவைத்தோம்" என்று
கொஞ்சிக் குலவின... நம்
தரையெரிந்த போதுதாம் வேறு திசைநாடிப்
பறந்ததெல்லாஞ் சொல்லிப் பகிடிவிட்டுஞ் சிரித்தன.... நான்
விடைபெற்றேன்
'கால'நிலை மாறியதாற்தான் சொந்த
மடிவிட்டுப் புள்ளினங்கள்
வந்தன.... நான் கையசைத்தேன்!
வேர்பெயர்ந்து எங்கோ விழுதுவிட்டுச் சொந்தவூரைப்
'பார்த்து-விட்டுப் போகப் படையெடுக்கும்
நம்மவரும்
வெளிநாட்டுப் பறவைகளா?
விளங்காமல் நடக்கின்றேன்.

த.ஜெயசீலன்

# மானிட விடுதலையை தளராது நேசிக்கும் படைப்பாளி



ச.வே.பஞ்சாட்சரம்

**- இறுதிப் பகுதி -**

"சொறியும் வரையினித்துச் சொறிந்த பின்னர் எரிவெடுக்கும்
சிறுமைச் சுகங்கள் சேற்றில் புரள்கின்றோம்!
பதவியா போனாலும் பவிசான அரசாங்கப்
பதவிதான் வேண்டுமெனும் பதர்ப்பண்பில் ஊறிட்டோம்............"

என்று உணர்வுபூர்வமான விடயமொன்றைத் தொட்டுக் காட்டும் கவிஞன் மறுநிமிடம் போலிகளை விமர்சிக்கிறார்.

"பெல்பொட்டம் மேல் நாட்டுப் பெரியுவிலை உடையணிந்து
செல்வந்தர் சடங்குகளில் சீமான்கள் போல் வெருண்டு
சப்பாத்துக் காலாலே சரக்கரைத்துக் கூத்தாடும்
பொப்பாட்டம் ஆடுகிறார்! போலிகளாய்த் தலை குனிந்தோம்!"

'நாடும் வீடும்' தொகுதியில் "தாழ்ந்த தலை நிமிர......!" எனும் தலைப்பில் 1975இல் கவிஞர் கொக்குவிலில் வழங்கிய கவியரங்கக் கவிதையில் தமிழுணர்ச்சி பொங்கிச் சரிக்கிறது.

"அங்கியினைக் களைந்தெறிந்தும் ஆயுதங்கள் ஏந்திடுவேன்
சிங்களத் தீவாக இத்தீவை மாற்ற எண்ணும்
மங்கள தேரோக்கள் மலி மூர்க்கச் சாதியினால்
எங்களினம் மிகவிரைவில் எஞ்சாமல் அழிந்துவிடும்!
இவர்களுக்கா சாத்வீகம்? இவர்க்காசத் யாக்கிரகம்?
குவிக்காமல் கோடிவகை ஆயுதங்கள் தூங்கில் நாம்
சவக்காலை, கல்லறைக்கும் தகுதியிலாச் சவங்கள் தாம்!" என்று முழங்கும்

கவிஞர் அதே அரங்கில் தன் கவிதையைத் தொடருகையில் இடையில்

"இனியொருக்கால் இவர்கள் இதயந் திருந்துமெனத்
தினையளவும் நம்பல் தீங்கிற்கு வித்தாகும்!
கடல் வற்றும் ஓர்நாள் கணக்கின்றி மீன் கிடைக்கும்
பிடித்துண்பேன் எனநம்பிப் பேய்க் கொக்கு காத்திருந்து
செத்தகதை யாகிவிடும் திருந்திடுவோம் இன்றைக்கே........" என்று அறிவுரைக்கிறார்.

கவிஞர் ச.வே.பவின் 1970 களிலிருந்து 1990 கள் வரையான மூன்று தசாப்தகாலக் கவிதைகளை (கவியரங்கக் கவிதைகள், பிரசுரமான கவிதைகள்) இனப்போரின் வரலாற்றுக் காரணங்களோடு கொப்பிளிக்கும் உணர்ச்சிப் பெருக்காகவும், எள்ளிநகையாடும் சிரிப்பொலி யாகவும் காணவும், கேட்கவும் முடிகிறது.

அக்காலங்களில் இவரை இடதுசாரிகள் (குறிப்பாகச் சில தமிழ் இடதுசாரிகள்) கண்டிப்பான தொனியில் விமர்சித்ததுண்டு. (தமிழ்த் தேசிய வாதத்தின் தளங்களில் நின்ற கவிஞர் இன்றும்கூட சமதர்மக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறார். எனினும் 'சுதந்திரன்' பத்திரிகையில் இடதுசாரிகளான முற்போக்கு எழுத்தாளர்களை 'வயிற்றுப்போக்காளருக்கு' எனும் தலைப்பில் கடுமையாகத் தாக்கி விமர்சித்திருக்கிறார். அக்கவிதை 'ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்', தொகுப்பின் 54 ஆம் பக்கத்தில் உள்ளது)

கவிஞரின் 'பூகம்பப் பூக்கள்' கவிதைத் தொகுதியின் மிகப்பெரும்பாலானவை நகைச்சுவை மிகுந்த குறும்பாக்களாக உள்ளன. எனினும் வாழ்வு சார்ந்த பல முக்கிய விடயங்களே பாடுபொருட்களாக உள்ளன. சமூகம் என்ற தலைப்பின் கீழுள்ள சில பாக்களைப் பார்ப்போம்.

"கட்டில் ஒன்று வாங்கினேனே தேவி - கட்டில்
தொட்டில் ஒன்று வாங்குவித்த (து) ஏவி!
கட்டில் வாங்கியதால்
தொட்டில் ஒன்று வாங்கியதால் வட்டில் பத்து
வாங்கிவிட்டேன் பாவி - பத்தில்
எட்டுமின்று புலிகள் ஏ.கே. காவி!" (கவிதை இலக்கம் 12)

என்ற இக்கவிதை ஒரு விடயத்தை ஞாபகப்படுத்துகிறது. 1960களில் கருத்தடைச் சிகிச்சை முறைகள், கருத்தடை மாத்திரைகள், உறைகள் என்பன இலங்கைத் தமிழர் மத்தியில் தீவிரமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாக தமிழின உணர்வாளர்கள் கருதினர். தமிழர் சனத்தொகையைக் குறைக்க சிங்கள அரசு இந்த யுக்தியை கைக்கொண்டதாக அவர்கள் உறுதியாகக் கூறினர். அக்காலகட்டத்தில் இவ்விடங்களைப் பாடுபொருளாக்கிய கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம், பத்து பிள்ளைகளைப் பெற்று அதில் எட்டுப் பிள்ளைகளை போருக்கு அனுப்புகிற ஒரு பாத்திரத்தை தனது நகைச்சுவை உணர்வோடு கூறுவது சிந்தனைப் பரப்பில் மெல்லிய அதிர்ச்சி அலைகளைப் பாயவிடுகிறது. இவ்விடயம் சார்பாக பூகம்பப் பூக்களுக்குள் மற்றுமொரு உடைப்பு நிகழ்ந்தேறியுள்ளமை பரகசியமான ரகசியமாக வாசகரின் கொடுப்புக்குள் சிரிப்பைச் சேர்க்கிறது:

"கருத்தடை மத்திரையை லூப்பைத் தாண்டி - இந்த
கள்ளப்பயல் பூமிக்கு வந்தாண்டி
பெருத்த விழாப் பிறந்ததினம் வைத்தான் - நானும் பிறந்த வெற்றி விழாவிதன்று
ரைத்தேன்!" (கவிதை இலக்கம் 22)

1960 களில் மஹாகவி உருத்திரமூர்த்தி, இ.முருகையன், கி.நாகராஜன், திமிலைத்துமிலன், தான்தோன்றிக் கவிராயர், சொக்கன் ஆகியவர்கள் உள்ளிட்ட மூத்த கவிஞர்களுடனும் கவிஞர் சா.வே.ப அரங்குகளில் அணி செய்திருக்கிறார். தனது சம காலத்தவர்களான-புதுவை இரத்தினதுரை, சோ.பத்மநாதன், - காரை சுந்தரம்பிள்ளை, புலவர் பார்வதி நாதசிவம், பா.சத்தியசீலன் கவிஞர் துரையர்(கந்தரோடை) ஆகியோருடனும் அச்சு ஊடகங்களிலும் அரங்குகளிலும் கவிதைகள் வழங்கியுள்ளார்.

கவிஞர்.ச.வே.பவின் வாரிசுக் கவிஞர்களான த.ஜெயசீலன், குறிஞ்சி நாடன்(கண்டி) செல்வி.தா.இஸ்மாலிகா, குருபரன், பிரசாந்தன், திருக்குமரன், ந.முகுந்தன், க.முகுந்தன், க.மகேந்திரன், வேலணையூர் சுரேஷ் ஆகியோருடனும் இவர் அச்சு ஊடகங்களிலும் அரங்குகளிலும் இலத்திரனியல் ஊடகமான வானொலியிலும் மிளிர்ந்திருக்கிறார்.

சமூகம், தீவிர தமிழ்த் தேசியம், ஆன்மீகம் என்பன சார்ந்து அகப்பொருள், புறப்பொருள் இரண்டிலும் கவிதைகளை நூற்றுக்கணக்கில் வடித்து பல புத்தகங்களை வெளியிட்ட கவிஞன். ச.வே.பஞ்சாட்சரம் சமகால சமாதான முயற்சிகள் பற்றி மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்.

"சமாதான முன்னெடுப்பு வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அதற்குக் குந்தகமான கருத்துக்களை இலக்கியங்களாகப் படைப்பதை இடைநிறுத்தி- சமூகச் சீரழிவுகளையும் ஆன்மீகப் பின்னடைவுகளையும் சீர் செய்யும் இலக்கியங்களை நாம் (இலக்கியவாதிகள்) படைப்பதும் எமது முந்திய படைப்புக்களை ஆவணப்படுத்திப் பேணுவதும் முக்கியமானதாகும்" என்பதே அவரது கருத்தாகவுள்ளது.

**க.பறுவலர்**

# உள்வெளி

சில மாதங்களின் முன்னர் கொழும்பு சென்றிருந்த வேளை லேக் ஹவுஸ் புத்தக நிலையத்திற்கும் போனேன். புத்தக வரிசைகளை ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டிருந்த போது, அங்கு எனக்கோர் ஆச்சரியம் காத்திருந்தது. ஆம்! ஏராளமான சிங்களப் படைப்பிலக்கிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களைக் காணமுடிந்தது!

ஈழத்தில் நவீனத் தமிழ் இலங்கியப் படைப்பிலக்கியங்கள் படைக்கப்ட்டு சுமார் அறுபது ஆண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் மிகச்சிறிதளவே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அதிலும், தனித்தொகுப்பாக ஈழத்துத் தமிழ்ப்படைப்புக்கள், இது வரை வெளிவரவில்லை. ஆனால் அதற்கான தேவை பெரிதாக இருந்துவருகிறது. எங்கள் வாழ்வும், வளமும், போராட்டமும் பிறமொழியினருக்கும் தெரிய வரவேண்டும், இதற்கு ஆங்கிலமொழி நல்லதோர் ஊடகம். தவிர,

"திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செலுத்தல் வேண்டும்"
என்பது பாரதி வாக்கல்லவா?

செல்வா கனகநாயகத்தினால தொகுக்கப்பட்டு, கனடாவின் ரொறன்டோவிலுள்ள **TSAR** பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட - ஈழத்தமிழ்ப் படைப்புக்களின் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுப்பான - **Lutesong and Lament** (யாழிசையும் ஒப்பாரியும்)என்ற நூல் அண்மையில் என்கைக்குள் கிட்டியபோது மகிழ்ச்சியாய் இருந்தது.




முப்பத்துமூன்று ஈழப் படைப்பாளிகளின் (புலம்பெயர்ந்தோர் உட்பட) 13 சிறுகதைகளும், 36 கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஏ.ஜே.கனகரத்தினா உள்ளிட்ட ஏழுபேர் மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். தொகுப்பாளரின் விரிவான அறிமுகக் கட்டுரை, படைப்பாளர் - மொழி பெயர்ப்பாளர் பற்றிய குறிப்புகள், படைப்புகளில் கையாளப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களிற்கான ஆங்கில விளக்கங்கள் என்பன தனியாக இணைக்கப்பட்டுள்ளன. வன்னியைச் சேர்ந்த ஒளிப்படக் கலைஞரான அமரதாஸ எடுத்த ஒளிப்படத்தை வைத்து, நூலின் அட்டை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் என்ற அமைப்பு ரொறன்டோ பல்கலைக்கழகத் தென்னாசியமையத்துடன் இணைந்து, இந்நூலின் வெளியீட்டு விழாவை இவ்வாண்டின் ஆரம்பத்தில் நடத்தியுள்ளது

"ஜனவரி 19ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஒரு மணிக்கு ஸ்காபரோ சிவிக் மைய மண்டபத்தில் **Lutesong and Lament** என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்பட்டது.

...இந்நூலைத் தொகுத்த ரொறன்டோ பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் கூட்டத்தை நெறிப்படுத்தி ஆரம்ப உரையாற்றினார். இந்த நூலைக் கொண்டுவரவேண்டுமென்று முன்மொழிந்து அயராது உழைத்த பத்மநாப ஐயரை நாம் மறக்க முடியாது. அவர் ஒரு திட்டத்தை ஆரம்பித்தால் அது பூர்த்தியாகும் வரை ஓய மாட்டார். தன்னலமற்றவர். இந்நூல் வெளிவரும்வரை, இது அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விடயம் அவருக்குத் தெரியாது.

இந்த நூலின் தலைப்பைத் தெரிவு செய்தவர் கனடா இலக்கிய உலகத்தில் உயர்ந்த விருதுகளைப் பெற்ற வஸஞ்சி; மிகச் சரியாகத் தொகுக்கப்பட்ட கவிதைகளில் இழையோடும் பிரிவுத் துயரைப் பிரதிபலிப்பதாக அது இருக்கிறது என்றார்.

...இவ்விழாவின் சிறப்பு அம்சமாக புதிய பரம்பரையினரான ஏழு தமிழ் மாணவ மாணவிகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் நூலில் காணப்படும் சில கவிதைகளை வாசித்தார்கள். இவர்கள் தமிழ்க் கலைப்படைப்புக்களைச் சுவைத்து அதில் ஆர்வம் பெற்று, இன்னும் பல மொழிபெயர்ப்புக்களைத் தங்கள் சொந்த முயற்சியில் எதிர்காலத்தில் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கையை இந்த நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது"

இணையத்தில் வாரந்தோறும் வெளியாகும் திண்ணை சஞ்சிகையில் (27.01.2002) எழுத்தாளர் என்.கே.மகாலிங்கம எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகளே மேலே தரப்பட்டவை.

த ரொறன்டோ ஸ்ரார் பத்திரிகையில் (10.03.2002) அபரித்த பண்டாரி எழுதிய கட்டுரையில் "செழுமையும் அதிஷ்டங்களுங்கொண்ட சமகால இலங்கைத் தமிழ் எழுத்துக்கள் 'யாழிசையும் ஒப்பாரியும்' நூலில் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன" எனச் சொல்லுகிறார். படைப்பு வாசிப்பில் ஈடுபட்ட தமிழ் மாணவர் சிலர் பற்றிய குறிப்பையும் தருகிறார்:

"18 வயதான திமித்திரி எதிர்மனசிங்கி, இலங்கைத் தமிழ்ப் படைப்புக்களின் செழுமையைக் கண்டு கொள்ளக் கிடைத்த வாய்ப்பை உயர்வாக மதிக்கிறார், இங்குள்ள பாடசாலைகளில் இத்தகையவற்றை படிக்கும் வாய்ப்பு இல்லை. நான் யார் என்பதைப்பற்றிய உணர்வினை இப்படைப்புக்கள் எனக்குத் தந்துள்ளன. படைப்புக்கள் மிக நன்றா யிருக்கின்றன. மொழிபெயர்ப்பில் சில அம்சங்கள் இழக்கப்பட்டாலும் உணர்வுகள் பரிமாறப்படுகின்றன. சொற்கள் என்றும் நிலைத்துவாழும்' எனவும் அவர் கூறினார்".

திண்ணையின் பிறிதோர் இதழில் கல்பனா சோழன் குறிப்பிடுகிறார்.

"ஐந்து தலைமுறைப் படைப்பாளிகளின் படைப்புகளில் ஆதாரமாக [illegible] ஓங்கி ஒலிப்பது போர்க்குரல். சமூக அநீதிக்கும் இன ஒடுக்குமுறைகட்கும் எதிரான போர்க்குரல் ரஷ்மியின் கவிதை சொல்வது போல, இவர்களின் கண்ணீரையும் கவிதை யையும் பிரித்துப்பார்த்துவிட முடியுமா?

ஆனால் இவர்களின் கண்ணீரிலும், சோகத்திலும் கையாலாகாத்தனம் இல்லை. தார்மீகக் கோபம் இருக்கிறது, உரிமைக்குரல் இருக்கிறது."

காலச்சுவடு இதழில் (செப்ரெம்பர் - ஒக்டோபர் 2002) பிரசன்னா ராமஸ்வாமி எழுதுகிறார்:

"... புகலிட வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களை பல தேச அகதிகளோடு சேர்ந்து எதிர்கொள்ளும் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலும் அழகியலும் எதுவென 'அயலார்' மனம்கொள்ள இதுபோன்ற தொகுப்புகள் வழிசெய்யும்"

ரொறன்டோ பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் மில்ரன் இஸ்ரேல் இந்த தொகுப்பில் உள்ள கவிதைகளின் அடிக்கருத்தாக இருக்கும் அடையாளம் தேடுதல், பிரிவுத்துயர், புலம்பெயர்வு, அமைதிக்குலைவு போன்றவற்றை எடுத்துக் காட்டுகிறார்.

நூல் அறிமுக நிகழ்வின்போது இலங்கைத் தமிழ்ப் படைப்புக்களின் செழுமையைப் பற்றி திஸ்ஸ றெஜி சிறிவர்த்தன, சிவத்தம்பி ஆகியோர் குறிபிட்டதை நான் பாராட்டினேன். "இ[illegible]நூல் வி[illegible] கூடியதொன்றாயினும், இலங்கைத் தமிழ் எழுத்[illegible]களின் [illegible] சிறந்த மாதிரியாகும்." என்கிறார், விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன்.

டெய்லி நியூஸ் நாளேட்டில் (10.04.2002) சோ[illegible]ற்றீஸ எ[illegible] புனைபெயரில் எழுதுபவர் இந்நூலின் மொழிபெயர்ப்புப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"கனகரத்தினாவினதும் ஏனையோரினதும் மொழிபெயர்ப்புக்கள் பேச்சுத்தமிழின் உண்மை யான வாசனையைத் தக்கவைத்து, யாழ்ப்பாணச் சூழலுக்கே உரிய குறிப்பான அடையாளங் கொண்டவர்களாகப் பாத்திரங்களை உருவாக்குகின்றன. முன்னுரையாக, கனகரத்தினாவும், ஏனையோரும் மொழிபெயர்ப்புக்களாகத் தருவது மிகவும் அசலானவையும் உண்மையான வையுமாகும்." எனப் பராட்டுகின்றார்.

உலகத் தமிழ் என்ற இணையச் சஞ்சிகையில் கவிஞர் சி.சிவசேகரம, "ஈழத்தமிழரின் புலப்பெயர்வின் விளைவுகளின் ஆக்கமான பக்கமாக இதைக் கொள்ளலாம்.

... ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் மிகுந்த பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளப்பட்டமை பற்றிக் குறிப்பிடாமல் விடலாகாது" என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறெல்லாம் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இந்நூல் குற்றங்குறைகளுக்கு அப்பாற்பட்டதா?

தொகுப்பாளரின் கூற்றுடன் இப்பந்தியை முடிக்க விரும்புகிறேன்:

" இந்த நூல் ஒரு தொடக்கமே. சில படைப்பாளிகள் தொகுப்பில் [illegible]ம்பெற்றவி[illegible]லை. இன்னும் சில அவகாசமின்மையால் விட்டுப்போயின. இது பூரணமா[illegible] முயற்[illegible]ல்ல அடுத்த நூல்களில் இவை பூர்த்தி செய்யப்படும்."

**- சூரி -**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உன்னை நிறை மனிதனாக்கிய சமூகத்திற்கு நீ என்ன செய்யப்போகிறாய்....?*

*- லிங்கன்.*

# நமது நோக்கு

## உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம் !

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மேலும் ஒரு தொகுதி பட்டதாரி மாணவர்கள் நேற்றைய தினம் வெளியேறியிருக்கிறார்கள். யாழ். சமூகத்தில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு என்பது காலம் காலமாகக் கொண்டுள்ள உயர்மதிப்பின் அடிப்படையில், எதிர்காலத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாக வெளியே வரும் மாணவர்களை வரவேற்கின்றோம்!, வாழ்த்துகின்றோம்.!!

கடந்த மூன்றாண்டுகளாகவோ நான்காண்டுகளாகவோ - கற்ற கல்வியின், பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், தகுந்த கல்விசார் பின்புலம் ஒன்றுடன் சமூகத்திற்குள் புத்தூக்கம் நிறைந்த மனிதர்களாக உலாவரப் போகும்-இந்த இளைய சகோதர, சகோதரி[illegible]ன் முன்னால் - அவர்களது வாழ்க்கைப்பாதை என்ற நெடிய பயணம் காத்திருக்கின்றது.

இதுவரை காலமும் பெற்றோரதும், பாதுகாவலர்களதும் அரவணைப்பில், உதவியில் கழித்த காலம் கடந்துபோக - தத்தமது சொந்தக்கால்களில் நின்று தொழிலையோ, உயர்கல்வியையோ தொடர வேண்டியவர்களாக மாறியிருக்கும் இந்த மாணவர்கள்-சந்திக்கப்போகும் நாளைய தினங்கள் பற்றி இன்றிலிருந்தே சிந்திக்கவேண்டும்.

ஒரு காலத்தில் - பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்தவுடன் அரச உத்தியோகம் தேடி வரும் என்ற பெரும் நம்பிக்கையில் எமது தமிழ்ச் சமூகம் வாழ்ந்திருந்தது. அந்தளவிற்கு - பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், அவர்களுக்கான அரச வேலை வாய்ப்பும் கணிசமானளவில் காத்திருந்தது. இந்தக் காலகட்டம் கடந்து போக, தனியார் துறையினரின் வருகையும், வேலைவாய்ப்புக்களில் தனியிடத்தைப் பெற்ற காலமும் வந்தது.

ஆனால் - இன்றைய சூழலில்-பல்கலைக்கழகங்கள் உருவாக்கி வரும் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிக[illegible]க இருப்பதோடு, புதிய தொழிற்துறைகள் எதிர்பார்க்கும் விசேட அம்சங்கள் பட்டதாரிகளிடம் எதிர்பார்த்தளவு காணப்படாததும் தெரிவுகள் விடயத்தில் நெருக்கடிகளை உண்டு பண்ணியுள்ளது.

கல்வியற்துறைப் பேராசிரியர் சந்திரசேகரம் கூறுவது போல - இன்றுள்ள தனியார்துறையினர் எதிர்பார்க்கும் - தொடர்பாடல் திறனும், கணினிசார் அறிவும், தலைமைத்துவப் பண்பும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் பட்டதாரிகளிடம் எதிர்பார்த்தளவுக்கு கிடைக்கப் பெறவில்லை என்ற கருத்தானது இங்கு ஆழமாக ஆராயப்பட வேண்டியதாகும்.

பல்கலைக்கழகங்கள் - பட்டங்களைச் சுமக்கும் பட்டதாரிகளை உருவாக்குவதை விட, நாளை அந்தப் பட்டதாரிகள் வெளியுலகை எதிர்நோக்கக் கூடியவர்களாக அவர்களை உருவாக்குவதே தலைசிறந்த வழியாக அமையும் என்றும் பேராசிரியர் சந்திரசேகரம் [illegible]வும் கூறுகின்றார்.

இந்த வகையில் - யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து [illegible]ாக வெளியேறியுள்ள பட்டதாரிகள் தமது எதிர்காலத்தை வளம்படுத்தக் கூடியதாக தமது பாதையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழகப் படிப்பொன்றே போதுமானது என்று இருந்து விடாது, வேலைவாய்ப்புக்களை வழங்கப் போகும் வெளியுலகம் எதிர்பார்க்கும் தகுதிகளையும் அவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தாம் கற்ற கல்விக்கான பணியொன்று கிடைக்கப் பெறாவிடில்-சுயமுயற்சி போன்ற மாற்று வழிகளைச் சிந்தித்து-தமது வலுவையும், அறிவையும், திறனையும் தேங்க விடாமல் நகர்த்திச் செல்லக்கூடிய வகையிலும் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றிலும் மேலாக -சுய வளர்ச்சியை மட்டுமே சிந்தித்து விடாது, தாம் வாழ்ந்துவரும் சமூகத்தின் உயர்வுக்கும் சிறப்புக்கும் பங்கேற்பாளர்களாக அவர்க[illegible] மாறவேண்டும்.

[illegible]த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், புதிய பலத்துடன் தமிழினம் தலைநிமிர்வதற்கும் அவர்கள் தமது பணியைப் பயன்படுத்த வேண்டும். அதுவே அவர்கள், தம்மை வளர்த்த சமூகத்திற்காற்றும் [illegible]த [illegible]வையாகவும் இருக்கும்.

# மேல் கொத்மலை திட்டம் அமுலாக்கினால் அரசுக்கான ஆதரவை விலக்குவோம்!

**- ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை -**

மேல் கொத்மலை நீர்மின் நிலைய அமைப்புத் திட்டத்தை அரசாங்கம் கைவிடாவிட்டால் அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்க வேண்டியிருக்கும் என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எந்த எதிர்ப்புக்கள் வந்தாலும் மேல்கொத்மலை நீர்மின் நிலையத்திட்டத்தை அரசாங்கம் கைவிடாது என அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளதையடுத்தே ஆறுமுகம தொண்டமான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அரசாங்கம் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் உறுதியாக இருந்தால் தமது கட்சியின் ஆதரவை அது இழக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ள அவர் மேல்கொத்மலைத் திட்டத்துக்கு எதிராக மல்வத்தபீட மகாநாயக்கர் மற்றும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## மர்மப் பொருள் வெடித்து குடும்பஸ்தர் கையில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மர்மப் பொருள் ஒன்றை எடுத்து அமுக்கிப் பார்த்த ஒருவர் அது வெடித்ததால் கையில் பலத்த காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமுற்றவர் குடமியன் வரணியைச் சேர்ந்த ஆ.நடராஜா (வயது 39) எனத் தெரிய வருகின்றது. மர்மப் பொருள் வெடித்ததில் இவரது வலது கையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

## மாதகலில் கடற்படையினர் பயிற்சி; குண்டுச் சத்தங்களால் அப்பகுதி அதிர்வு!

(காங்கேசன்துறை)

மாதகல் பகுதியில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருப்பதாக அப்பகுதியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாதகல் வடக்கில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தில் காலையிலும் மற்றும் இரவு வேளைகளிலும் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாலேயே இக்குண்டுச் சத்தங்கள் கேட்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலத்துக்குப் பின்னர் இப்பகுதியில் குண்டுச் சத்தங்களைக் கேட்க முடிவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடக்கும் திருமலை, வாழைச்சேனை ரயில் சேவைகள்

வாழைச்சேனை மற்றும் திருகோணமலைப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வருவதாக ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் அண்மையில் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் மறியல் போராட்டங்களின் போது ரயில் பாதைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாலேயே ரயில் சேவைகளை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வாழைச்சேனைக்கான ரயில் சேவைகள் வெலிக்கந்த வரையிலும், திருகோணமலைக்கான ரயில் சேவை கந்தளாய் வரையுமே தற்போது நடைபெற்றுவருகின்றன.

வாழைச்சேனைக்கும் வெலிக்கந்தவுக்கும் இடையிலும், திருமலைக்கும் கந்தளாய்க்கும் இடையிலும் சேதமாக்கப்பட்டுள்ள ரயில் பாதைகள் சீர்செய்யப்பட்டதும் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## போக்குவரத்துச் சபை தனியார் வசமாகும்!

### எதிர்த்து வழக்கும் தாக்கலாகும்

(கொழும்பு நிருபர்)

இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது. போக்குவரத்துச் சபை நாடு முழுவதும் 11 பிராந்தியச் சபைகளைக் கொண்டுள்ளது.

இந்தச் சபைகளைத் தனியாரிடம் விற்பனை செய்வதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. நாளிதழ்களில் இச்சபைகளின் பங்குலாபங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதேவேளை அரசின் இந்தத் தனியார் மயப்படுத்தல் திட்டத்துக்கு எதிராக போக்குவரத்து பாதுகாப்புச் சங்கம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னரும் ஐ.தே.க அரசாங்கம் போக்குவரத்து சபைகளை தனியார் மயமாக்க நடவடிக்கை எடுத்த போது போக்குவரத்து பாதுகாப்பு சங்கம் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தது. அரசாங்கம் போக்குவரத்துச் சபைகளைத் தனியார் மயப்படுத்தக் கூடாது என நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் முரண்பாடு நேரடி சந்திப்புக்கு ராஜித முடிவு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுடன் சுமுகமான அரசியலை நடத்த விரும்புவதாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

சமீபகாலமாக ஜனாதிபதி சந்திரிகாவை கடுமையாக விமர்சித்தும், முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்தும் வரும் ஐ.தே.மு அரசாங்க அமைச்சர்களில் ராஜித சேனாரத்ன, மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் முக்கியமானவர்கள்.

தற்போதுள்ள நிலையில் ஜனாதிபதியுடன் இணங்கிப் போகத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கும் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன சகவாழ்வு அரசியல் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் இணங்கிப்போக அரசாங்கம் தயாராக இருக்கின்றபோது ஜனாதிபதியுடன் இணங்கிப்போவதில் கஷ்டம் இல்லை எனவும்,

ஜனாதிபதியுடன் இணங்கிச் செயற்படுவது குறித்து தனிப்பட்ட பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் ராஜித - இப்பேச்சுக்கள் 16ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

# வீடுகளை படையினரிடமிருந்து பெற்றுத் தருக! பல்லப்பைப் பகுதி மக்கள் கோரிக்கை!!

(வடமராட்சி கிழக்கு)

பல்லப்பை சேர்ந்த 24 குடும்பங்கள் தமது வீடுகளை மீளப்பெற்றுத் தருமாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தியை மகஜர் மூலம் கேட்டுள்ளார்கள்.

அவருக்கு அனுப்பப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- பல்லப்பை இராணுவ முகாம் 1996ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு வீடுகளை விட்டு நாம் வெளியேற்றப்பட்டோம். இதனால் நாங்கள் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகிறோம். அன்றிலிருந்து இன்றுவரை எமது வீடுகளைப் பார்க்கவோ அல்லது பொருட்களை எடுக்கவோ அனுமதிக்கப்படவில்லை.

இது சம்மந்தமாக கிராம அலுவலர், பிரதேச செயலரை அணுகினோம். ஆனால் எவரும் அக்கறை காட்டி எந்தவொரு நடவடிக்கையும் எடுத்ததாக எமக்கு அறிவிக்கவில்லை.

இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்டபொழுது மிகவும் நல்ல நிலையில் இருந்த வீடுகள், வளவுகளில் இருந்த பெறுமதியான பொருட்கள் அகற்றப்பட்டு வந்தன. பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டு வந்தன. இதையிட்டு கிராம அலுவலர், பிரதேச செயலாளருக்கு அறிவித்தும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

# மனித உரிமை மீறல் முறைப்பாடுகளை சர்வதேச அளவில் எடுத்துச் செல்வது எப்படி?

## யாழ்ப்பாணத்தில் விரைவில் பயிற்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்வது எப்படி என்பது பற்றிய விசேட பயிற்சித்திட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள புத்திஜீவிகள் பலர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் இல்லம் என்ற மனித உரிமைகள் அமைப்பின் மூலமாகவே இப்பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மனித உரிமை மீறல் சம்பவங்களை அடையாளம் காணுதல், குறிப்பிட்ட மனித உரிமை மீறல் சம்பவம் தொடர்பாக முறைப்பாடுகளை வரைவு செய்தல், உரிய ஆவணங்களைத் தயார் செய்தல் போன்ற விடயங்களிலும் சர்வதேச ரீதியான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச நிறுவனங்கள் தொடர்பாகவும் விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறியினைப் பின்பற்றுவதில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் அடையாளம் காணப்பட்டு தெரிவு மூலமாக இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவ்வாண்டு இறுதியில் இப்பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது. (க)

# கிராமப்புற மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தல்

ஒரு தனி மனிதனின் உடல், உளவளர்ச்சியிலும், கல்வி அபிவிருத்தியிலும் கவனம் எடுக்கும் பொழுது ஒரு சமூகத்தின் கல்விச் செயற்பாடுகளும் அதன் உயர் விழுமியங்களும் அதிகரிக்கும் என்பது கல்வியியலாளர்களின் அடிப்படைக் கோட்பாடாகும்.

இக் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலேயே கல்விக்கான திட்டமிடலும், நடைமுறைப்படுத்தலும் அமைந்திருக்க வேண்டும்.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள், நவீன தொழில்நுட்பத்திறன், வினைத்திறன் உள்ளதாக்கப்பட வேண்டுமானால் பின்வரும் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கப்பட வேண்டும்.

1. கற்றல் செயற்பாட்டை செய்முறை ரீதியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் முழுமையான ஆய்வுகூட வசதிகள்.

2. ஒரு மாணவனுக்கு 10 நூல்கள் என்ற வகையில் நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நூலக வசதிகள்.

3. பௌதீக, மனிதவள ஆளணி வசதிகள்.

4. தகவல் தொழில்நுட்பத்திறன் விருத்தி ஏற்படுத்தக்கூடிய வசதிகள்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இனரீதியான பாரபட்சமான நடவடிக்கைகளும், வடக்குக்கான கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட பொருளாதாரத் தடைகளும் நவீனத்துவத்தை நோக்கிய கல்விச்செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லமுடியாமல் போய்விட்டது.

நவீன இலத்திரனியல், தொழில்நுட்ப யுக மாறுதல்களுக்கு ஏற்ப கல்வி புகட்டுதலிலும், கற்றலிலும் செயற்திறன் வாய்ந்த கல்விச் செயற்பாடுகளிலும் எமது தமிழ் மாணவர்கள் சுமார் 20 வருடங்கள் பின்தள்ளி உள்ளனர் என்ற விரும்பத்தகாத அந்த உண்மையை எமது கல்வியியலாளர்களும், கல்விச் சமூகமும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அந்த வகையில் வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும் போதியளவு அனுப்பி வைக்கப்படாத நிலையில் கடந்த 20 வருடங்களாக வடபகுதி மாணவர்கள் செய்முறை அறிவற்ற அறிமுறை ரீதியான முறையிலேயே விஞ்ஞான பாடங்களைக் கற்று நூலறிவுக் கல்வியுடனேயே வெளியேறிவிடுகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை இருந்தது.

இத்தகைய ஒரு வெற்றிடத்தை நிரப்புமுகமாக வடக்கு - கிழக்கு பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வகையில் நடமாடும் விஞ்ஞான ஆய்வு கூட சேவையை (MOBILE SCIENCE LABORATORY SERVICE) வடக்கு-கிழக்கு மாகாண விஞ்ஞா னப்பிரிவு செயற்படுத்தி வருகின்றது.

ஒரு பாடசாலையில் இருக்கின்ற வளங்களுடன் மேலதிகமாகக் கொண்டு செல்லப்படுகின்ற வளங்களில் இருந்து உச்சப்பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையிலேயே இவ்வேலைத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

இச் செயல்திட்டத்தினூடாகப் பின்வரும் விளைவுகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

1.பின்தங்கிய கிராமப்புற பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான செய்முறை அறிவு மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

2.க.பொ.த.சாதாரண வகுப்புகளிலும், உயர்தர வகுப்புகளிலும் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் செய்முறை, ஆற்றலை நவீன கற்பித்தல் முறைக்கேற்ப விருத்தி செய்து கொள்கின்றனர்.

3.கிராமப்புறத்தில் வசதி குறைந்த சூழலில் கற்கின்ற மாணவர்களில் பலர் இப்பொழுது தான் முதன் முதலாக விஞ்ஞான உபகரணங்களை அனுபவ ரீதியாகப் பார்த்து அடையாளம் காணத் தொடங்கியுள்ளனர்.

விஞ்ஞான உபகரணங்களை நேரில் பார்த்து அறியாத மாணவர்களில் அவற்றின் பயன்பாடு பற்றிய தெளிவை அறிந்து கொள்ள முடியாது. ஒரு சில வருடங்களுக்கு முன்னர் க.பொ.த. (சா/த) விஞ்ஞான வினாத்தாளில் சில விஞ்ஞான உபகரணங்களின் படங்கள் கீறப்பட்டிருந்தன. ஒரு வாயுத்தயாரிப்பின் பொழுது அவ்வுபகரணங்களை எவ்வாறு ஒழுங்கு செய்யலாம் என்பதைப் படம் வரைந்து காட்டுக என்று இருந்த வினாவுக்கு யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதிய பல மாணவர்கள் வட்டக் குடுவையின் மேல், பன்சன் சுடரடுப்பை வைத்து வரைந்துள்ளதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.



**நடராஜா அனந்தராஜ்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்மொழிப்பிரிவு, நூலக பெருவளர்ச்சிப்பிரிவு, வட-கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

4. செய்முறை ரீதியாகக் கற்கும் மாணவர்களின் விஞ்ஞானபாட அடைவு மட்டமும், சிந்தனை ஆற்றலும் அதிகரித்தமை.

5. இத்தகைய விசேட செயல் முறைகளை மேற்கொள்வதன் மூலம் ஆசிரியர்களும், மாணவர்களும் நவீன அறிவியல் தொழிநுட்பத்தை அறிந்து கொள்ளவும் அவற்றினூடாகப் புதியனவற்றைக் கண்டு பிடிக்கும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

6. இச் செயல்பாட்டில் ஆர்வமும் விழிப்பும் ஏற்படத் தொடங்கியதை அடுத்துமேலும புதிய விடயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்ற உந்துதலால் மாணவர்களும், ஆசிரியர்களும் புதிதாக வெளிவருகின்ற அறிவியல், தொழில்நுட்ப நூல்களை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்து வருகின்றனர். இதற்காகவே பாடசாலைகளில் நூலக அபிவிருத்திகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் பல புதிய விடயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே உயர்தர விஞ்ஞான வகுப்புகள் கொண்ட சகல பாடசாலைகளுக்கும் அண்மையில் புதிய அறிவியல் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய நடமாடும் ஆய்வு கூட சேவையினூடாக வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒரே இடத்தில் சந்திப்பதால் அவர்கள் தமது அனுபவங்களையும் ஆற்றல்களையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் தமது பரந்து பட்ட அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

இத்தகைய வாய்ப்புக்களையும் வசதிகளையும் கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகள் மட்டுமல்லாது நகரப்புறங்களில் இருக்கின்ற வசதியும் வளங்களும குறைந்து நலிந்து போய் இருக்கும் பாடசாலைகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்பொழுது தான் எமது மாணவர்களும் சர்வதேச தரத்திற்குத் தமது அறிவியல் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்.

## விருந்தினர் பக்கம்

# எங்கும் எதிலும் நிறைந்த சக்தியை உள்ளத் தூய்மையுடன் வணங்குவோம்

சக்திகளுக்கெல்லாம் ஊற்றாகவும் உந்து விசையாகவும் விளங்கும் ஆதிபராசக்தியை ஏற்றிப் போற்றும் மரபு மிகத் தொன்மையான காலந்தொட்டு நிலவி வருகிறது. அன்பும், பரிவும் அன்னையிடம் நிறைந்திருப்பதனால் இறைவனைத் தாயாக வைத்து வழிபட்டனர். புரமெரித்த பரமன் பாகத்துறையும் பரமேஸ்வரியாகவும் நல்லன ஈயும் நாகேஸ்வரியாகவும் உருவெடுத்து அருள் பாலிக்கின்றாள்.







"எத்திறம் நின்றானீசன் அத்திறம் அவளும் நிற்பாள்" எனும் வாக்கிற்கு ஒப்ப இறைவனின் சக்தியாய் நின்று ஆக்கலில் வாணியாய், அளித்தலில் திருவாய் நின்று, அழிக்கின்ற வேளையில் துர்க்கையாகவும் நின்று திருவருள் புரிகின்றாள். குறைவிலா செல்வமீயும் திருமகளாகவும், கலையும், கல்வியும் சுரந்தளிக்கும் கலைமகளாகவும் வீரமூட்டும் துர்க்கையாகவும் ஆருயிர் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும் சக்தியாய் அன்னை விளங்குகிறாள்.

அன்னை ஆதிதேவியை மனதுள் இருத்தி நோன்பிருந்து வேண்டியவற்றைப் பெற்றுய்யும் பொருட்டு புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி ஈறாகவுள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. சக்தி விரதங்களுள் மேலானதும் இதுவே ஆகும்.

கும்பபூசை எனும் சிறப்பினைக் கொண்ட இவ்விரதத்தை வீடுகளிலும், பாடசாலைகளிலும், தொழில் ஸ்தாபனங்களிலும் கொண்டாடுவர். ஆதி தமிழ்மன்னர்கள் வீரமும் வெற்றியும் வேண்டிப் போற்றுதல் செய்த கொற்றவைத் தெய்வமான துர்க்கையை முதல் மூன்று நாளும் வழிபடுவர்.

அடுத்து வரும் மூன்று தினங்களும் செங்கமலப்பூவில் உறையும் எழில் மேனியாளை இன்னருள் சொரிந்து நிதம் இருளகற்றும் அலர் கதிராய் நிறைமதியாய் என்றும் குறைவிலா செல்வமீயும் இலக்குமியைப் போற்றுதல் செய்வர்.

நவராத்திரியின் இறுதி மூன்று தினங்களும் கல்விக்கும் கலைகளுக்கும் அதி தேவதையான வாணி சரஸ்வதியைத் துதிப்பர். இந்த மூன்று நாள்களும் கண்கவர் விழாவாக கலையம்சம் நிறைந்ததாகவே காணப்படும். இந்துக்களின் கலைத் திருவிழாவென்று பழந்தமிழர் போற்றிய பண்பாட்டு விழாவென்றும் ஆன்றோர் கூறுவர். ஒன்பது தினங்களிலும் குமாரி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என்று தேவியின் நாமம் சூட்டி அலங்கரித்து அழகுபடுத்தி கன்னிப்பெண்களைத் தேவியின் அம்சமாக வரித்து பூசித்தலும் அழகிய பொம்மைகளை கொலு வைத்து தீபமேற்றி பூசைகள் செய்தும் மனம் நிறைவாக வணங்குவர்.

"ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் மேயவுணர்விற்க்கும் என்னம்மை - தூயவுருப்பளிங்கு போல் வாழ் என்னுள்ளத்தினுள்ளே யிருப்பளிங்கு வாராதிடர்" என்று கம்பர் பெருமான் பளிங்கு போன்ற வெண்மையை உடைய வாணி கலைகள் எல்லாவற்றிக்கும் மூலமானவள் என்றும் அவளைப்பணிந்தால் ஒரு துன்பமும் நேராது என்றும் அறிவுறுத்துகின்றார். எண்ணெழுத்து கற்பதற்கு மட்டுமல்ல உண்டி கொடுக்கும் உழவுத்தொழிலுக்கும் ஏனைய எல்லாத் தொழில்களுக்கும் நிறைவுற அருள்பவள் அன்னை வாணி சரஸ்வதியே. நாடிப்புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும், அறிவுடைத்தூய இடங்களெங்கும் உவந்து நடமாடிக் களிப்பவளும் கலைமகளே. வேதத்தின் தலைவியாய் வித்தைகளின் நாயகியாய் சீதப்புனலின் சிவந்த மேனியோடு வெண்பட்டாடையணிந்து, வெண் தாமரைப்பூவில் வீணையும் ஏடும் எழுதுகோலுமேந்தி செம்மையழகோடு பெருந்திறன் கொண்ட பெண்ணரசியாய் வீற்றிருப்பாளை மண்டலத்திசைகளும் வணங்கும்.

நவராத்திரி பூசையை அடுத்து வரும் பத்தாம் நாள் வரும் தசமி திதியை விஜயதசமி என்பர். ஒன்பது தினங்கள் தேவியை உள்ளன்போடு பக்தியோடு பூசித்ததின் பலன் கைவரப்பெறும் திருநாளாக விஜயதசமி தினத்தைக் கொண்டாடுவர். முடியும், கொற்றமும், கொடியும் இருந்து கோலோச்சிய தமிழ் மன்னர்கள் விஜயதசமி தினத்தன்று குடை, கொடி, சிம்மாசனம், படைக்கலன்கள் ஆகியவற்றைப்பூசித்தும், நால் வகைப் படைகளின் அணிவகுப்பும் இடம் பெற வீரசாகச விளையாட்டுக்களும் நடாத்தி மிகக் கோலாகலமாக கலைவிழாவாகக் கொண்டாடினர் என்றும்,கல்வியிற் புலமை உள்ளோர்க்கும், கலைகளில் வித்துவம் பெற்றார்க்கும், வீரபுருஷர்களுக்கும் விருது வழங்கி பாராட்டி கௌரவித்து மேன்மைப்படுத்தினார்கள் என்றும் வரலாறுகள் கூறுகின்றன. அஞ்ஞாதவாசம் முடித்த பாண்டவர்கள் தாம் மறைத்து வைத்த ஆயுதங்களை மீளவும் எடுத்து பூசை செய்த நாளும் இதுவென பாரதம் தெரிவிக்கின்றது.

பல்வகைச் சிறப்பு மிக்க விஜயதசமி நன்னாளில் வித்தியாரம்பம் ஏடுதொடக்கல், தொழில்களை ஆரம்பித்தல் போன்ற பல சுபகருமங்களைச் செய்வதும் வழமையிலுள்ளது.* விஜயதசமியன்று கோயில்களில் நிகழும் ஒரு முக்கியமான பூசையும் திரு நாளும் 'மானம்பு,' எனப்படும் மகாநோன்புத் திருவிழாவாகும். தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் விடாது பல இடர்களை செய்து கொடுமைப்படுத்திய காட்டெருமை வடிவினனான மகிடாசுரனை தேவி சங்கரித்த நன்னாள் விஜயதசமியாகும். தேவி அவ்வசுரனை வதம் செய்த பாவனையாக வாழைமரம் அல்லது வன்னி மரம் நாட்டி அம்மரத்தை வெட்டி திருவிழா செய்வர். மகடாசுரவதம் என்று சொல்லப்படுகின்ற இந்த விழாவானது தத்துவம் ஒன்றை எல்லார்க்கும் விளக்கி நிற்கின்றது. அன்பு, பாசம், கருணை, பொறுமை மிக்க அன்னையானவளை இந்த ஒன்பது தினங்களும் நோன்பு இருந்து அனுட்டித்ததின் பயனாக தேவியின் நற்கருணையினால ஆன்மாக்களை ஈடேற்ற விடாது தடுத்து நிற்கும் மிகக் கொடிய ஆணவத்தை, அறியாமையை, விலங்கு குணத்தை முற்றாக அழித்து உண்மையான அறிவு பிறந்து ஞானமும் கைகூடும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

- கந்த. தியாகராசா

## தேரேறு வெங்கடேசா

(இன்று வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலய தேர் உற்சவம்)

பாண்டவர்க்கு தூதுசென்ற பாண்டுரங்கா
பாஞ்சாலி துயர்தீர்த்த பரந்தாமா
வேண்டும் தீர்வைத் தமிழருக்கு தரவே
வேங்கடேசா வண்ணையிலே தேரேறு

கவிமாமணி
காரை.எம்.பி.அருளானந்தன்

# இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதற்காக இந்தியாவிடமிருந்து 'துரோணா' ஆயுதங்கள்!

(கொழும்பு)

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆயுதத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றிடம் இருந்துபடை யினருக்கான பயிற்சி ஆயுதங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் உள்ள இலத்திரனியல், மற்றும் இயந்திரவியல், பொறியியல் நிறுவனம் 'துரோணா' என்ற பயிற்சி ஆயுதம் ஒன்றைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்து வருகின்றது.

புதிய படையினருக்கான பயிற்சி ஆயுதமாகவும், காலாட்படையினரின் சுடு திறனை உயர்த்துவதற்கேற்ற பயிற்சி ஆயுதமாகவும் இதனைப் பயன்படுத்தலாம்.

'துரோணா' ரகத்தைச் சேர்ந்த பயிற்சி ஆயுதங்களை மேற்படி நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய பெங்களூரில் உள்ள நிறுவனத் துக்கு அரசாங்கம் குறிப்பிட்ட தொகை 'துரோணா' பயிற்சி ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் கட்டளையை அனுப்பி வைத்துள்ளது.

ஆனால் இந்திய அரசாங்கம் இந்த ஆயுதத்தை வேறு நாடுகளுக்கு விற்பதற்கான அனுமதியை வழங்கவில்லை எனத் தெரியவருகின்றது.

இருந்தபோதிலும் இந்த ஆயுதத்தை வாங்குவதற்காக இலங்கை, பர்மா, எகிப்து போன்ற நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலைக்கு அமைச்சர்கள் விஜயம்









திருமலைக்கு விஜயம் செய்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் வீட்டில் நடத்திய கலந்துரையாடலில் கலந்து கொண்ட வட-கிழக்குப் பகுதிக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோகா டீ சில்வா, அமைச்சர் மகேஸ்வரன், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், அமைச்சர் காமினி லொக்குகே ஆகியோரை முதலாவது படத்திலும்,

மேற்படி கலந்துரையாடலில் இரா.சம்பந்தன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும்,

திருமலைச் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஒருவரை பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் விசாரிப்பதையும் அவருடன் அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, மகேஸ்வரன் ஆகியோர் காணப்படுவதை மூன்றாவது படத்திலும்,

காயமடைந்த இன்னொருவரை அமைச்சர் காமினி லொக்குகே பார்வையிடுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள் — கௌதமன்)

## கைலாசபதி கலையரங்கில் இரு நினைவுப் பேருரைகள்

யாழ்.பல்கலைக்கழக 22வது பட்டமளிப்பு விழாவையொட்டி நடாத்தப்படும் சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப்பேருரை இன்று திங்கள் 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மொழியியற்துறை பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, "தமிழ் இலக்கியத்தில் ஔவை மரபு" எனும் விடயம் தொடர்பாக நினைவுரையை நிகழ்த்தவுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே, பல ஔவையார்கள் இருந்திருக்கிறார்கள். அனைவரையும் இணைத்து ஒரு ஔவையாராக தமிழ் இலககிய மரபு கட்டமைத்துள்ளது. இக்கட்டமைப்பை அவிழ்த்து, ஔவை பற்றிய சிந்தனை மரபின் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுவதாக இப்பேருரை அமையும். இந் நிகழ்வை அடுத்துக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என பதிவாளர் அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை இடம் பெறும் நிகழ்வில்,பேராசிரியர்சு.வித்தியானந்தனின் நினைவுபேருரையை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு நிகழ்த்துவார். ஈழத்துத் தமிழ் கூத்தியல் ஆய்வுகளும், ஈழத்துத் தமிழ் அடைந்த வளர்ச்சியும் எனும் விடயம் தொடர்பாக இந் நினைவுரை நிகழ்த்தப்படவுள்ளது.

ஈழத்தமிழரின் கலை அடையாளமாக ஈழத்துக் கூத்துப் பற்றிய ஆய்வும் தேடலும் 50 களிலிருந்து ஆரம்பமாகியுள்ளன. இவ்ஆய்வுகள் ஈழத்தில் மாத்திரமன்று தமிழகத்திலும் நடந்தேறியுள்ளன. இவ்வகையில் கூத்து ஓர் புலமைப் பொருளாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இக்கூத்தியல் ஆய்வுகளையும், கூத்து -ஓர் தமிழரின் ஆய்வாக ஈழத்தில் வளர்ச்சி அடைந்து வந்தமையையும் இந்த உரை எடுத்துக் காட்டுவதுடன், அது வளர வேண்டிய திசையையும் கூறுவதாக இவ்வுரை அமையவுள்ளது.

இந்நிகழ்வில் ஏனையோரோடு - க.பொ.த.உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களும், பட்டப்படிப்பில் நாடகமும் அரங்கியலையும் சிறப்பு பாடமாகப் பயில்வோரும், கலந்து பயன் பெற முடியும் .எனப பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஊர்காவற்றுறை விவசாயக் குழு பதினெட்டாம் திகதி கூடுகிறது

ஊர்காவற் துறை பிரதேச செயலகத்தில் விவசாயக்குழுக் கூட்டம் எதிர்வரும் 18ம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்துறை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் எதிர்வரும் காலபோகப் பயிர்ச் செய்கையில் உலக உணவுத்திட்டம் மற்றும் நியாப் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் விவசாயம் சம்பந்தமான பிரச்சனைகளும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய நாள் இனிய நாள்

**14.10.2002 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், மதிப்பு, வெளியூர்ப் பயணம், கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம். |
| இடபம் :- | தேகசுகம் நன்று, தெய்வவழிபாடு, தொழில் முன்னேற்றம்,கல்விமுன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மிதுனம் :- | தேகசுகக்குறைவு, பிரயாணத்தடை, தொழில் ஸ்தானத்தில் தொழில் செய்ய முடியாமை, கல்விமுன்னேற்றம், வியாபாரசமநிலை. |
| கர்க்கடகம் :- | தேகசுகம் நன்று, தொழில்முன்னேற்றம், கல்விச் சமநிலை, பெண்கள் மகிழ்ச்சி, வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் :- | தேகசுகம் சமநிலை, பொருள்வரவு குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் குறைவு. |
| கன்னி :- | தேகசுகம் நன்று, பொருள் வரவு, புத்திரர் சுகம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் :- | மாதா சுகக்குறைவு, வைத்தியச்செலவு, பணவரவு குறைவு, கல்வியில் ஊக்கம் காட்டவும், வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் :- | தேகசுகம் நன்று, பொருள்வரவு, சகோதர அன்பு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |
| தனு :- | தேகசுகம் சமநிலை, வரவுக்கு ஏற்ற செலவு, வாக்கு வாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் :- | தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, உறவினர் கூடுதல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கும்பம் :- | எடுத்த காரியம் தடை, தேகசுகக் குறைவு, மனஸ்தாபம், தேவையற்ற செலவு, கல்வியில் ஊக்கம் காட்டவும், வியாபார சமநிலை. |
| மீனம் :- | எடுத்த காரியம் வெற்றி, பெண்கள் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, கல்விமுன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |

## சின்னஞ் சிறு செய்திகள்

### அகில இலங்கைத் தமிழ்மொழித்தினம்

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகளும் விழாவும் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளதாக தமிழ்மொழிப் பிரிவுப் பணிப்பாளர் க.நடராசா தெரிவித்துள்ளார். இவ்விழா பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதுவரை நடைபெற்று முடிந்த தமிழ்மொழித் தினப்போட்டிகளில் வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகள் பத்து முதலாம் இடங்களைப் பெற்று முன்னணியில் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### உடுவில் கோட்ட நவராத்திரி போட்டிகள்

உடுவில் கல்விக்கோட்ட சைவ சமய திருமுறை மன்றம் நவராத்திரியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நீதிச்செய்யுள் மனனம், தொண்டு படும் செய்முறை, கதாப்பிரசங்கம், புராணபடனம் போன்ற பல்வேறு போட்டிகளை நடத்த இருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்களை நாளை15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், எதிர்வரும் 20ம் 21ம் திகதிகளில் போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் இடம் பெறுமென்றும் மேற்படி மன்றம் அறிவித்துள்ளது. (105)

### சனசமூக நிலைய நன்கொடை

வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் செயற்படும் சனசமூக நிலையங்களுக்கான 2002 நன்கொடை உள்ளூராட்சி திணைக்களங்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நன்கொடை நிதியிலிருந்து 'ஏ' தர சனசமூக நிலையங்களுக்கு 1600 ரூபாவும், 'பி' தர சனசமூக நிலையங்களுக்கு 1400 ரூபாவும் வழங்கப்பட உள்ளது. (105)

### தேர்தல் ஒத்திவைப்பு

ஊர்காவற்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக் குழுத்தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை நடைபெற இருந்த சங்கக் கிளைக்குழுத் தேர்தல் அன்றையதினம் நடைபெற்ற, ஹர்த்தால் காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாகவும்,மீள ஒரு தினத்தில் நடத்துவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி அறிவித்துள்ளார்.

### மட்டுவில் வீதி மோசமானநிலையில்

(சரசாலை)

நுணாவில் சந்தியையும், கலிகைச்சந்தியையும் இணைக்கும் பிரதான பாதையின் மட்டுவில் வீதி மிகமோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

இவ்வீதி யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்து ஒற்றையடிப் பாதைபோன்று காணப்படுகின்றது. இவ் வீதியைத் திருத்துமாறு பல முறை வீதி அபிவிருத்திஅதிகார சபையிடம் மக்கள் முறையிட்டும் பலனேதும் கிடைக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (34)

### அராலியில் கலைமகள் விழா

அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலய இந்துமா மன்றத்தின் கலைமகள் விழா இன்று மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்திரு சு.செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையை சிவதர்ம வள்ளல் சி.சச்சிதானந்தம் நிகழ்த்துவார்.

'நவராத்திரியின் மகிமை என்னும் பொருளில் சி.தையல்நாயகியும், மேலை நாடுகளில் இந்துதர்மம் எனும் பொருளியல் ஆசிரியமணி எஸ்.ஸ்ரீதயாளனின் சிறப்புச் சொற்பொழிவும், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விரைவில் முழுமையான இயல்புநிலையை குடாநாட்டில் ஏற்படுத்த அரச அதிபர் ஆர்வம்

## முதற்கட்டமாக அனைத்து வீதிகளிலும் மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முழுமையான இயல்பு நிலையை விரைவாக ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நிலவிவரும் சமாதான சூழலிலும் கூட குடாநாட்டின் சில பகுதிகளில் இயல்புநிலை முழுமையாகத் திரும்பவில்லை. இதனால் பொதுமக்களின் வழமையான செயற்பாடுகள் பாதிப்படைந்து வருகின்றன. யாழ்.மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர். இந்த நிலை இன்னமும் நீடிக்கிறது. இவ்வாறான நிலைமைக்கு குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் பொது வசதியீனங்களும் ஒரு வகையில் காரணமாக அமைந்து விடுகிறது.

இவ்வாறான பொது வசதியீனங்களை நிவர்த்தி செய்வதன் மூலம் முழுமையான இயல்புநிலை தோன்றுவதை விரைவுபடுத்துவதற்கு யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள வீதிகளில் இரவுநேர மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களின் இரவு நேர நடமாட்டத்தை அச்சமற்றதாக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

இதேபோன்று பொதுமக்களின் வழமையான நாளாந்த நடவடிக்கைகளையும், இயல்பு வாழ்வையும் பாதிக்கின்ற அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சிறப்புற நடந்தது பட்டமளிப்பு 1332 பேர் பட்டங்கள் பெற்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் கோலாக்லமாக நடைபெற்றது.

வேந்தர் சமுகமளிக்காத நிலையில் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.



பட்டமளிப்பு விழா ஐந்து அமர்வுகளாக நடைபெற்றது. இராமநாதன் மண்டபத்தின் முன்பான இருந்து மாணவர்கள் வரிசையாகச் செல்ல அவர்கள் பின் விரிவுரையாளர்கள், பின் பேராசிரியர்கள் புடைசூழ துணைவேந்தர் கொடி, குடை, ஆலவட்டங்களுடன் அழைத்துச் செல்ல்ப்பட்டார்.

விழா நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்ட கலையரங்கினுள் சென்று பட்டம் பெறும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் அங்குள்ள ஆசனங்களில் அமர பேராசிரியர்களும், துணைவேந்தரும் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதன்பின் பட்டம்பெறும் மாணவர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வுடன் பதக்கங்களும் வழங்கப்பட்டன. நேற்றைய பட்டமளிப்பு விழாவின்போது 8 பேருக்கு சிறப்புப் பட்டங்களும் வழங்கப்பட்டன.

முதலாம் அமர்வில் 'தேச மான்ய' வைத்தியகலாநிதி இராமச்சந்திரனுக்கு விஞ்ஞான கலாநிதி கௌரவப்பட்டமும், அருணாச்சலம் சோமசுந்தரம்பிள்ளைக்கு கௌரவ கலாநிதிப் பட்டமும்,

இரண்டாம் அமர்வில் ஆறுமுகம் சபாரத்தினத்திற்கு கௌரவ முதுகலை மாணிப்பட்டமும்,

மூன்றாவது அமர்வில் சிவசிறி கணபதீஸ்வரக் குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டமும்,

நான்காவது அமர்வில் வாழ்நாட் பேராசிரியர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை கணேசலிங்கத்துக்கு கௌரவ விஞ்ஞான கலாநிதிப்பட்டமும் அமரர் சின்னத்தம்பி சிவபாதசுந்தரத்துக்கு தேகாந்திர நிலையில் கலா நிதிப்பட்டமும்,

ஐந்தாவது அமர்வில் பேராசிரியர் பாலகிருஷ்ணனுக்கு தேகாந்திர நிலையில் கலாநிதிப் பட்டமும் வழங்கப்பட்டன.

இதைவிட கலை மாணிப்பட்டம் 381 மாணவர்களுக்கும், தொழில் நிர்வாகமாணிப்பட்டம் 89மாணவர்களுக்கும், வர்த்தகமாணிப்பட்டம் 73 மாணவர்களுக்கும், நுண்கலை மாணிப்பட்டம் 106 மாணவர்களுக்கும், மருத்துவசத்திர சிகிச்சைமாணிப் பட்டம் 20 மாணவர்களுக்கும், சித்த மருத் துவ சத்திரசிகிச்சை மாணிப்பட்டம் 10 மாணவர்களுக்கும்,விஞ்ஞானமாணிப் பட்டம் 131 பேருக்கும், விவசாய விஞ்ஞானமாணிப் பட்டம் 17 பேருக்கும், இசை டிப்ளோமா பட்டம் 28 மாணவர்களுக்கும் மீன்பிடியியல் டிப்ளோமா பட்டம் 52 மாணவர்களுக்கும் உடற் கல்விப்பட்டம் 27 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

## போராளிகள் யாழ். திரும்பினர்

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களான பாப்பா, சேரலாதன், செம்மணன் ஆகியோர் நயினாதீவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிவிட்டனர்.

படைத்தரப்பினர், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், புலிகளின் யாழ்ப்பாண அரசியல் துறையினர் ஆகியோர் உரையாடியதன் மூலம் கண்டுகொண்ட சமரசத்துக்கு இணங்க அவர்களின் பயணம் சாத்தியமாகியது. நேற்றுமுன்தினம் அரசியல் பணிக்காக நயினாதீவுக்குச் சென்ற விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் திரும்பி வர கடற்படையினர் மறுத்தமை வாசகர் அறிந்ததே.

## மின் உதவி பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகள் போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினருக்கு மின்சாரம் வழங்கப்படுவதாக சில ஊடகங்கள் தெரிவித்தற்கு போக் குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு இராணுவப் பிரதேசத்திலிருந்து எவ்விதமான மின்சார வசதிகளும் கிடைப்பதில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி புலமைப்பரிசில் வைபவம் ஒத்திவைப்பு!

(திருகோணமலை)

திருகோணமலையில் நடைபெறவிருந்த ஜனாதிபதி புலமைப் பரிசு வழங்கும் வைபவம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருமலைக் கடற்படைத்தளத்தில் நடைபெறவிருந்த இவ் வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா கலந்துகொள்ள விருந்தார்.கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையையடுத்தே இவ்வைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களைச் சேர்ந்த 300 மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

வைப வம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் திருமலைக்கு வரத்தேவையில்லை எனவும், நிகழ்வு இடம் பெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் எனவும் கே.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

*(முன்னர் வந்த செய்தி 3ம் பக்கத்தில்)*

## திருமலையில்...

கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. கடற்படையினரும் பொலீஸாரும் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, நகரப்பகுதியிலும் திருக்கடலூர், அன்புவழிபுரம், கேணியடி போன்ற பகுதிகளிலும் பொது மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. இதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது.

இதேவேளை, திருகோணமலை நகரில் சிவன் கோவிலடிப் பகுதியில் பிறிமா மா நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனம் ஒன்று இனந் தெரியாதோரின் கல்வீச்சுக்கு உள்ளாகியது இதனால் வாகனத்தின் கண்ணாடிகள் நொறுக்குண்டன.

## நாகர் கோயில்...

ஆனால் தற்போது நாகர் கோவில் வீதி திறக்கப்பட முடியாது எனப் படையினர் அறிவித்ததோடு மீண்டும் அப்பிரதேசத்தில் கண்ணி வெடிகள், மற்றும் அமுக்கவெடிகளைப் புதைத்துள்ளனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ராணுவ...

தடுக்கப்பட்டிருந்தன.

படையினரை ஏற்றிக் கொண்டு சென்ற வாகனம் ஒன்று வந்தாறுமூலைப் பகுதியில் வைத்துப் பொது மக்களால் திருப்பி அனுப்பப்பட்டது.

இதையடுத்துப் படையினர் புலிகளுடன் தொடர்பு கொண்டனர் . விடுமுறையில் செல்லும் படையினருக்குப் பாதுகாப்பு வழங்க புலிகள் முன்வந்ததையடுத்து அவர்கள் தொடர்ந்தும் பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

2 பஸ்கள் மற்றும் 2 கவச வாகனங்களில் சென்ற படையினருக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டு புலிக் கொடி பறக்க விடப்பட்ட வான் ஒன்று சென்றது. இதில் மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராசாவும் சென்றிருந்தார்.

எனினும் படையினர் ஏற்றிச் சென்ற வாகனங்களைச் செல்ல அனுமதிக்க முடியாதெனப் பொது மக்கள் மறியல் செய்திருந்தனர் . பின்னர் மட்டு.நகர் அரசியல் பொறுப்பாளர் சேனாதிராசா நிலையை விளக்கியதுடன் மட்டு - அம்பாறை 'சிறப்புத் தளபதி கேணல் கருணாவின் பணிப்புரையின் பேரில்தான் அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறினார்.

இதையடுத்து படையினர் தொடர்ந்து செல்ல பொது மக்கள் அனுமதி வழங்கினர். வெலிக்கந்த வரையில் புலிகள் படையினருக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

## கிழக்கு படுகொலைகள்....

பொலிஸ் மற்றும் சிங்களத் துணைப் படைகளால் செய்யப்பட்ட இக் கொடுஞ் செயல்கள் பற்றி சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சென்று, அவர்களது நிலைப்பாடுகளை அறியவுள்ளோம்.

இக்கூட்டத்தில் இரங்கலுரையாற்றிய விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.திலக்,

நாங்கள் சமாதானத்தில் உறுதியாயுள்ளோம். ஆனால் அரசாங்க படைகளிலுள்ள அமைதிக்கு விரோதமான தீயசக்திகளினால் சமாதான முயற்சிகள் தடம்புரள்வதை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது.

இது நாம் கட்டுப்பாடாக இருக்க வேண்டிய நேரம். அதனால்தான் நாம பொறுமையாகவுள்ளோம் என்றார்.

இந்த அஞ்சலிக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம்,கே.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் பேசினர்.

பொதுமக்களின் உடல்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டபோது இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - திருகோணமலை மாவட்டத்தில் 200 தமிழ் இளைஞர்களை ஊர்காவல்படையில் சேர்த்து ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட் டணி செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். நேற்று மதியம் தன்னைச் சந்திக்க வந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் பதற்றநிலையைத் தவிர்ப்பதற்காக திருகோணமலைக்கு வருகை தந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் நேற்று விஜயம் செய்தனர்.

நேற்றுக்காலையில் கச்சேரியில் சமாதான மாநாடு ஒன்றையும் நடத்தினர். இம்மாநாட்டில் நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருக்களை உள்ளடக்கியதான சமாதனக் குழு ஒன்று அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் குழுவினர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்தனர். இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம். மஹ்ரூப், தேசிய பட்டியல் உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் , வடக்கு கிழகக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோகா டீ சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## கலை-இலக்கிய....

காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளது., ஈழத்துப் படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், பார்வையாளர்களுடன் தெனனிலங்கையில் இருந்தும் பெரும் எண்ணிக்கையில் பேராளர்கள் இக்கூடலில் சங்கமிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேராளர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட உணவு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதால் பேராளர்களாக கலந்துகொள்ள விரும்புபவர்களை முன்பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல்களை எந்நேரமும் 0777245569 என்னும் செல்லிடத் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## போர் பாதித்த...

ஒவ்வொரு வீடும் சுமார் எண்பத்தி நாலாயிரம் ரூபா செலவில் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் தொகையில் இருபத்து ஏழாயிரத்து நானூறு ரூபாவை மனித முன்னேற்ற நடு நிலைய நிறுவனம் வழங்கவுள்ளது. மிகுதிப் பணத்தை யாழ். செயலகம் வழங்கவுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீட்டை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார். (க)

## கிழக்குப்....

அத்தியட்சகர் எம்.ஜே.சவாங்கன் நியமிக்கப் பட்டிருப்பதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது

இந்த ஆணைக்குழு கர்ஞ்சிரங்குடா, திருகோணமலைச் சம்பவங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதுடன் இராணுவத்தினர் , பொலீஸார், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தும் பேச்சு நடத்தும். அத்துடன் எதிர்காலத்தில் இத்த கைய சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்குரிய ஆலோசனைகளை யும் இரு தரப்புக்களிடமும் இருந்து இக்குழு பெறும் எனவும் தெரியவருகின்றது.


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

இறைவனின் இயற்கையான கொடை

1978 - 12 - 24



செயற்கையின் விபரீத செயற்படி

2002 - 08 - 31

அமரர் இராசன் சிவகுமார் (சிவன்)
பிள்ளையார் கோவிலடி,
தொண்டமனாறு.

*விதிப்படி பயணம்*
*வீதிவரை தொடர்ந்ததா...?*
*கதியின்றி கலங்குகிறோம்,*
*கடவுளிடம் வேண்டுகிறோம்,*
*நித்தியத்தில் - உன்*
*ஆத்மா சாந்தியடைவதாக!-*

மைத்துனர்
எஸ்.சற்குணதாஸ்
CWE(சதோச)
யாழ்ப்பாணம்.
மைத்துனி
ஆர்.சரோஜினிதேவி
(நோர்வே)

பிள்ளையார் கோவிலடி,
தொண்டமனாறு. (சி-53)


இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.